# காஞ்சி

விலை 20 காசு

24-12-67

## கோவை மாவட்ட தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள்



பழனியம்மாள்—தாராபுரம்.



மு. சின்னசாமி—ஈரோடு.

24.12.67.



கண்ணப்பன்—கிணத்துக்கடவு.



ஏ. எம். இராசா—பாவானி.



கே. என். சாமிநாதன்,
வெள்ளக்கோயில்.



ஈ. இராமசாமி—வால்பாறை.

# சார், தெரியுமா சேதி?

## அண்ணா அழைக்கிறார்!

ஆட்சி மொழிச் சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதையொட்டி, கூடிய விரைவில் இந்தியையே ஒரே ஆட்சிமொழியாக்க முயல்வதுபற்றி இடையறாது பேசிவருகிறார் சவாண். நிலைமை அஞ்சத்தக்க வகையில் உருவாகி இருக்கிறது; தமிழகத்தில் மாணவர்கள் கிளர்ச்சி தீயாகப் பரவிக்கொண்டிருக்கிறது. இத்தருணத்தில், இந்தி பேசாத பகுதி மாநில முதலமைச்சர்களைக் கூட்டி மாநாடு நடத்தி மொழியின் எதிர்காலம்பற்றி ஆலோசனை நடத்த முன்வந்திருக்கிறார்கள் அறிஞர் அண்ணா அவர்கள். இம்மாநாடு இத்திங்கள் இறுதியிலேயே நடைபெறும், நல்ல பல ஆக்கரீதியான செயல் திட்டங்களை எதிர்பார்க்க முடியும்.

## அண்ணா புகழ் நானூறு!

தென்னகத்தின் தலைவராம் அறிஞர் அண்ணா அவர்களைப் பாமாலைகளால் அர்ச்சித்து. தமிழர் தம் நன்றிக்கடனாற்றும் தூயபணியை புதுவையைச் சேர்ந்த நூல் வெளியீட்டுக் குழுவொன்று மேற்கொண்டிருக்கிறது. இது குறித்து அக்குழு, "அகவற்பாவில் முப்பது அடிகளுக்கு மேற்படாமல், திணை, துறைகளோடு தனித் தமிழ் கொஞ்ச பாடலுக்கேற்ற தலைப்போடு அறிஞர் அண்ணாவின் புகழொலிக்கும் தங்கள் ஆக்கங்களை, 1968-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் இறுதிக்குள் அனுப்பிவைக்க வேண்டுவதுடன், முன்கூட்டியே தங்கள் ஒப்பத்தை டிசம்பர் இறுதிக்குள் தெரியப்படுத்தக் கோருகிறோம்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளது. பாடல்கள் அனுப்பவேண்டிய முகவரி, 'அண்ணா புகழ் நானூறு' — நூல் வெளியீட்டுக் குழு, புதுச்சேரி-1 என்பதாகும்.

## மிஞ்சுவது 'சூன்யம்'தான்!

இந்தித் திணிப்பு மசோதா நிறைவேற்றத்தையடுத்து, நாடாளுமன்றத்தில் "சட்டவிரோதச் செயல் தடுப்பு மசோதா" என்ற பெயரில் இன்னொரு மசோதா தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்தித் திணிப்பு நடவடிக்கைகளின் எதிரொலியாக எதிர்காலத்தில் கிளர்ந்தெழக்கூடிய விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை மட்டுமல்லாமல் இந்திக்கு எதிரான கண்டனங்களையும் கிளர்ச்சிகளையும் அடக்கி ஒடுக்கும் உள்நோக்கத்துடனேயே இச்சட்டம் கொண்டுவரப்படுவதாக அறிவாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதுபோன்ற நடவடிக்கைகள் யாவும், இந்தி ஏகாதிபத்தியம்தான் இந்தியத் துணைக்கண்டத்தை எதிர்காலத்தில் ஆக்கிரமித்துக் கொள்ளப்போகிறது என்பதைத் தமிழகம் உணர்ந்து, தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால், 'சூன்யம்' ஒன்றுதான் தமிழகத்தில் எஞ்சி இருக்கும்!

## புத்தி வந்தது - புதுமை பிறக்குமோ?

ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதாவை எதிர்த்து 'நவசக்தி' என்ற காங்கிரஸ் ஏடு, தலையங்கம் எழுதி இருக்கிறது. தலைவர் காமராசரது காரசாரமான தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட ஞானோதயமாகத்தான் இது இருக்கவேண்டும். தலையங்கம் மட்டும் போதாது. தமிழர்கள் பாதிக்கப்படப்போகும் நிலையை எழுதிக்காட்டி மட்டும் தப்பிக்க முயலக்கூடாது. எதிர்காலம் காரி உமிழாமலிருக்கும் முறையில் தங்கள் பேனாவை, மானஇரத்தத்தில் நனைத்துஎழுதவேண்டும். இந்திக்கு எதிரான போர்க்குரலில், தமிழக அரசின் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பும் கொடுக்க வேண்டும்! காங்கிரஸ்காரர்களையும் போராட்டத்துக்குத் தயார் செய்யவேண்டும்! செய்யுமா காங்கிரஸ்? இப்படி ஒரு புதுமையை காங்கிரஸ் நிகழ்த்தும் என்று நம்பமுடியுமா?

## தமிழில் இல்லையாம்!

இனிமேல்மணியார்டர்பாரங்களைத் தமிழில்அச்சிடமாட்டோம் என்று கூறுகிறார் தபால் தந்தி இலாகா ராஜாங்க அமைச்சர் குஜ்ரல். இதனையடுத்து எழுந்த பாராளுமன்ற வினாவிற்குப் பதிலிறுத்த உள்துறை அமைச்சர் 'தமிழிலும் வெளியிடப்படும்—ஜனாதிபதியின் உத்திரவு இருப்பதனால்' என்று கூறி இருக்கிறார். இந்தி வெறிக்கு யார் யார் எப்படி எப்படிப் பலியாகிறார்கள் என்பதற்கு சுவையான ஒரு எடுத்துக்காட்டு இது!

## இந்திக்கு எதிராக-மணவிலக்கு!

இந்திக்கு ஆதரவாக நடத்தப்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் எதிரொலியாக லக்னோவில் பல மணவிலக்கு வழக்குகள் நீதிமன்றத்துக்கு வந்திருக்கின்றனவாம்! சுமார் 12-க்கு மேலான வழக்குகளாம்! ஆங்கிலத்துக்கு எதிராகவும், இந்திக்கு எதிராகவும் கூட மணவிலக்கு கோரப்பட்டிருக்கிறதாம்! ஐயோ! இந்தியே! இன்னும் என்னென்ன செய்யப்போகிறாயோ! இத்துணைக் கண்டத்தை!

## ஐயோ அரசியலே!

தென்மேற்கு ஆப்பிரிக்க நாட்டில், ஜாம்பியாவில், ஒரு கட்சியிலிருப்பவர்கள் இன்னொரு கட்சியிலிருப்பவர்களுக்குப் பெண் கொடுக்கவோ, எடுக்கவோ கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களாம்! ஒரு நீதிமன்றத் தீர்ப்பின் எதிரொலியாம் இது! அரசியல் வெறித்தனம் என்னென்ன கட்டுப்பாடுகளை விதிக்கிறது என்கிறீர்கள்! கேரளத்தில்கூட இடது—வலது கம்யூனிஸ்டுகள் கணவன்–மனைவியானோர்–கட்சி வேறுபாடு காரணமாக பிரிந்திருக்கிறார்களே! ஐயோ அரசியலே!!

## இந்திக்குத் தண்டனை!

கார், லாரி முதலான வாகனங்களில் குறிப்பிடப்படும் எண்கள் ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும் என்பது சட்டம்! ஆங்கில எதிர்ப்புணர்ச்சி காரணமாக ஒரு டிரைவர், தம் வாகனத்தின் எண்களை இந்தியில் மாற்றினாராம்! வழக்குத் தொடரப்பட்டது. இந்தியில் மாற்றியது குற்றம் என்று சொல்லி அவருக்கு நீதிமன்றம் தண்டனை யளித்திருக்கிறது. ஆமாம்! அபராதம் கட்டியிருக்கிறார் அந்த டிரைவர், இங்கல்ல—வடக்கே!

—தொகுப்பு: ராஜிமணாளன்.

# காஞ்சி

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 4 24—12—67 இதழ் 22


# கிளர்ச்சிகள் வேண்டாம்!

நாடெங்கும் மாணவர் கிளர்ச்சி தொடங்கிவிட்ட செய்திகளைத் தாங்கிக்கொண்டு வெளிவரத் தொடங்கிவிட்ட நாளிதழ்களைப் படிக்கிறபோது அச்சம் பற்றிக் கொள்கிறது. 1965-ம் ஆண்டு நடைபெற்ற பயங்கரப் போராட்டமும், அதன் எதிரொலிகளும் மனக்கண் முன்னுல் பளிச்செனத் தெரிகின்றன.

ஒரே ஒரு ஆறுதல்; அன்று மாணவர்களுக்குப் பேட்டி கூடத் தரமுடியாது என்ற முதலமைச்சர்! இன்றே, மாணவர்களின் உணர்ச்சியை மதித்து, தான் காட்டுகிற பாதையில் அவர்களை அழைத்துச் செல்கிற முதலமைச்சர்.

நேருவின் வாக்குருதிக்குச் சட்ட வடிவம் என்ற பெயரில், வாக்குறுதியின் அடிப்படையையே தகர்த்துத் தூக்கி எறிந்துவிட்ட—இந்தித் திணிப்பு மசோதா என்றே பெயர் சூட்டத்தக்க ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா நாடாளு மன்றத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதும் அடுத்து மேலவையிலும் அது ஒப்புக் கொள்ளப்பட்டுவிடும் என்ற நிலையும்தான் மாணவர்களது இத்தகைய எழுச்சிக்கு மூலகாரணம் என்பதை நாடு நன்கறியும்.

இந்தி தெரியாது என்று சொல்ல எவருக்கும் உரிமை இல்லை என்று அச்சுறுத்திக் கொண்டிருக்கிருர் இந்தியத் துணைப் பிரதமர். அதே வேளையில், உள்துறை அமைச்சரோ, கூடியவிரைவில் இந்திஒன்றுதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும்; அதற்கான நடைமுறைகளைத் தீவிரப்படுத்துவோம் என்று சொல்லி அச்சுறுத்திக் கொண்டிருக்கிருர். பிரதமர் இந்திரா அம்மையாரும், தானும் சளைத்தவரல்ல இந்தித் திணிப்பில் என்று எடுத்துக் காட்டுபவர்போல நாடாளுமன்றத்தில் கருத்துக்களைச் சொல்லி வருகிருர்.

நாடாளு மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதா, மாநிலங்களவையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பிறகு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கும் வந்து தீரவேண்டிய சடங்குகள் இன்னும் எஞ்சி இருக்கின்றன.

அதற்குள்ளாக இந்தி வெறியர்கள் தம் கோரப் பற்களால், பிற மொழியாளரைப் பதம் பார்க்கத் தொடங்கிவிட்டிருக்கிருர்கள். விபூதி மிச்ரா போன்ற ஓநாய்கள், தமிழர்களுக்கு விலை பேசுகின்ற அளவுக்கு நாடாளு மன்றமும், மத்திய அமைச்சரவையும் இடம் தந்திருக்கின்றன.

இவை யெல்லாமாகச் சேர்ந்துதான், தமிழகத்து மாணவர்களை கிளர்ச்சி முறைக்கு அழைத்துச் சென்றுவிட்டிருக்கிறது.

இத்தகு கிளர்ச்சிகள் மூலம், தமிழக மாணவர்கள், 'தமிழர்கள் விலைப் பண்டங்கள் அல்ல; தன்மானமிக்கவர்கள்! இந்திப் பகையே, ஓடு. ஓடு, பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடு' என்று என்று தம் மான உணர்வைக் காட்டி இருக்கிருர்கள்.

மொழி மசோதா மூலம், முதலாவதாக அரசு ஊழியர்களைவிட மாணவர்களே பெரும்பான்மையும் பாதிக்கப்படுபவர்கள். எனவே, தங்கள் எதிர்காலத்தை எண்ணியும், வரவிருக்கின்ற தீமையை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும் மாணவர்கள் பெற்றிருக்கிற உரிமையை, இக்கிளர்ச்சிகள் மூலம் நாட்டுக்கறிவித்திருக்கிருர்கள்.

ஆனுல்,

கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்படுகிறபோது, கிளர்ச்சி என்பதன் பேரால்—எதிர்ப்புக் குரல் என்பதன் பேரால்—கண்டன ஊர்வலம் என்பதன் பேரால் வன்முறைகளை விளைவிப்பதை 'உரிமை' என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்! ஒப்புக்கொள்ளவும் முடியாது.

வன்முறைச் செயல்களை மாணவர்களே முன் நின்று செய்ய முனைவதில்லை என்பதனை நாம் ஒப்புக்கொண்டாலும், அத்தகு சூழல்களைப் பயன்படுத்திக்கொண்டு சதிகாரர்களும், சந்தர்ப்பப்பேய்களும் தங்கள் தங்கள் கைவரிசைகளையும் கலந்து காட்ட முனையும்போது 1965ம் ஆண்டு நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடும் என்பதனை நினைந்து பார்க்கவேண்டி இருக்கிறது.

தமிழகத்தின் அமைதிச் சூழலைத் தகர்த்தெறிய தருணம் பார்த்துக்கொண்டிருக்கும் காங்கிரசுக்காரர்கள் கூட இந்த நிலையைப் பயன்படுத்திக்கொள்ள முன்வரத் தயங்கமாட்டார்கள் என்பதனை மாணவர்கள் அறியாமலிருக்க முடியாது.

மாணவர்களது உள்ளப் புண்ணையும், உணர்வையும் திட்டவட்டமாகவும், தீர்க்கமாகவும் உணர்ந்துகொண்டிருக்கிற, தமிழர்கள் நலம் பேணும், தமிழின் வளம் பேணும் ஒரு ஆட்சி இப்போது செங்கோல்பற்றிக் கொண்டிருக்கிறது என்பதனையும் மாணவர்கள் ஒப்புக் கொள்கிருர்கள்.

இந்த அரசாங்கமே இந்திக்கு எதிரான தனது குரலை உச்சிவரையில் உயர்த்திக் கொண்டு வந்துள்ள பரம்பரையின் தோற்றம் என்பதனையும் மாணவர்கள் தெரிந்து வைத்திருப்பவர்கள்தான்.

எனவே, இந்தி மொழி விவகாரம் தொடர்பான எல்லா விவகாரங்களையும் அறிஞர் அண்ணு அவர்களை முதலமைச்சராகக் கொண்ட தமிழக அரசிடம் விட்டுவிட்டு மாணவர்கள் தங்கள் படிப்பில் முழுக் கவனத்தைச் செலுத்துவது ஒன்றுதான், அரசின் கரத்தை வலுவாக்கச் செய்வதாகும்.

சில கல்வி நிறுவனங்களில் தேர்வுகள் தொடங்கியுள்ளன. சில தொடங்கும் நிலையிலுள்ளன. இந்நிலையில் மாணவர்கள் அனைவரும் படிப்பு ஒன்றின்மீது மட்டும் அக்கறை காட்டுவது ஒன்றுதான் அவர்களது எதிர்காலத்தை நிர்ணயக்கிற நற் செயலாக இருக்க முடியும்.

தீயவை, தீய பயத்தலான், தீயவை தீயினும் அஞ்சப்படும் என்ற குறள் கற்ருேர் தீய வழி முறைகளைத் தெர்ந்தெடுத்துக்கொள்வது, தீயதேயாகும்.

இந்தியை எதிர்க்கின்ற ஆட்சியினரிடம் பிரச்னையை ஒதுக்குங்கள்—கல்வியிலேயே கவனத்தை நாட்டுங்கள்! கயமைச் செயல் புரிவோர்க்குத் துணை போகாதீர்கள் என்று மாணவர்களை அமைச்சர்களுடன் சேர்ந்து நாமும் கேட்டுக்கொள்கிருேம். ●

# நீதிதேவன் மயக்கம்

[ முத்து ]

ஆம்; நீதிதேவன் மயங்கி விழுந்தான். நீதி சோரம் போகும் கோரக் காட்சியைக் காணச் சகியாமல் நீதி தேவன் மயங்கி வீழ்ந்தான்.

நீதி, நேர்மை, தர்மம், நியாயம் அத்தனையும் ஒட்டு மொத்தமாகத் தமிழரின் பக்கம்— இந்தி பேசாத மக்களின் பக்கம் இருப்பது நீதிதேவனின் கூர்த்த மதிக்குத் தெளிவாகிறது.

வஞ்சகம், பொருமை ஆணவம், அதிகார வெறி ஆகிய அனைத்தும் ஒட்டு மொத்தமாக இந்தி வெறியர்களின் பக்கம் இருப்பதும் தெரிகிறது. இருந்தும்.........

சமன் செய்து சீர்தூக்கும் துலாக்கோல்போல் அமைய வேண்டிய தன் தீர்ப்பை வழங்க முடியாமல் தன்னைக் கட்டாயப்படுத்தும் ஏதோ ஓர் ஆற்றலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நீதிதேவன் மயங்கிச் சோர்ந்தான்.

## நேருவின் உறுதியைச் சட்டமாக்குவதுதானே நோக்கம்?

இந்தி பேசாத மக்களுக்குத் தம்முடைய தந்தை பண்டிதர் நேரு வழங்கி, அடுத்து வந்த லால்பகதூர் சாஸ்திரியாரால் உறுதிப்படுத்தப்பட்ட வாக்குறுதிக்குச் சட்ட உருவம் தருவதுதான் நோக்கம் என்ருல் மூலத் திருத்த மசோதாவோடு நின்றிருக்கலாம் அல்லவா இந்திரா காந்தி?

எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னே நேரு கொடுத்த வாக்குறுதியைச் சட்டமாக்குவதில் இன்னம் ஏன் தாமதம் என்று கேட்டபோது 'பலவகைக் கருத்து ஓட்டங்களுக்கு மதிப்பளிக்கும் வகையில் மசோதா தயாரிக்க வேண்டியிருப்பதால் காலதாமதம் ஆகிறது' என்று இந்திராவும் சொன்ஞர், உள்துறை அமைச்சர் சவாணும் சொன்ஞர்

அப்படியாஞல் ஓரளவு சமரச ஏற்பாடு என்று கருதத் தக்க அளவில் அமைந்திருந்த திருத்த மசோதாவை—நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சி ஏற்றுக் கொண்ட திருத்த மசோதாவை—அப்படியே விவாதிக்காமல் உடன் நிகழ்ச்சியாக ஒரு அர்த்தமற்ற தீர்மானத்தையும் ஒட்டவைத்து விவாதித்த நோக்கம் என்ன?

## யாரோ ஒரு நேருவாம்......!

'நேருவின் உறுதி மொழியைச் செயல்படுத்த மனமில்லை—இந்தி பேசாத மக்களைத் தற்காலிகமாகத் திருப்திப்படுத்தக்கூட மனமில்லை' என்பதுதானே அதன் அர்த்தம்? 'இந்தி பேசாத மக்களுக்கு யாரோ ஒரு நேரு வாக்குறுதி வழங்கிஞல் அது எங்களை எப்படிக் கட்டுப் படுத்தும்?' என்று நாடாளுமன்றத்தில் இந்தி வெறியர்கள் பேசியதை இந்திராகாந்தியால் எப்படி ஜீரணிக்க முடிந்தது?

அப்படியாஞல் யாரோ ஒரு காந்தி தென் ஆப்பிரிக்காவில் தமக்கு ஏற்பட்ட ஒரு சாதரண அனுபவத்தையொட்டி இந்துஸ்தானி இந்தியாவின் பொதுமொழி ஆகவேண்டுமென்று தப்புக்கணக்குப் போட்டதை ஒப்புக்கொள்ளத் தமிழர்களுக்கு நேர்ந்த 'தலையெழுத்து' என்ன?

## தமிழரின் மனப்பக்குவம்.

விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு தமிழரின் தனியுடைமை. உண்மைதான். ஆஞல் அதற்கும் ஓர் அளவுண்டு. இந்தியே வேண்டாம் என்று சொல்லும் தமிழர்கள், இந்தத் திருத்த மசோதாவை மட்டும் ஏற்க முன்வந்தார்கள் என்ருல், அதுதான் அவர்கள் மனப்பக்குவத்தின் முதிர்ச்சி! அதை எள்ளி நகையாடுவதுபோல இந்தி வெறியர்கள் திருத்தம் கொண்டு வருவார்களாம்; அதை இந்திராகாந்தி ஏற்றுக்கொள்ளுவார்களாம். அப்புறம் இந்தி பேசாத மக்களுக்கு வழங்கும் நீதிதான் என்ன?

குட்டக் குட்டக் குனிகிற இனம் தமிழினம் அல்ல' தமிழர் சாதுக்கள்தான். ஆஞல் சாதுமிரண்டால் காடு கொள்ளாது' என்ற பழமொழியை இந்தி வெறியர்கள் புரிந்துகொள்ளட்டும்.

உத்திரப்பிரதேசத்தின் அலகாபாதில் காங்கிரசுக் கட்சியின் தலைமை நிலையம் அமைந்திருந்தது என்பதாலேயே காந்தியார் சொன்ன இந்துஸ்தானியை—இந்தி ஆக்கிக்கொள்ளவும், பிறகு வஞ்சகவலை விரித்து இந்தியை அரசியல் சட்டத்தில் பித்தலாட்டமாக ஏற்றிக் கொள்ளவும், பின்னர் அதையே வேதவாக்குஎன்று சுட்டிக் காட்டி மற்றவரை தேசத்துரோகி என்று பட்டஞ் சூட்டவும் துணிகிற நிலை இனி விலையாகாது.

## நல்லவர் நெஞ்சில் விரிசல்

நாடாளுமன்றத்தில் மொழிப் பிரச்சினை விவாதத்தில் உண்டான சூட்டில், இந்தியாவில் இந்தி பேசும் பகுதி–இந்தி பேசாத பகுதி என்று தனிப் பகுதிகள் இருப்பது வெளிப்பட்டு விட்டது. இந்தி வெறியரின் அற்பத்தனமான விதண்டா வாதங்களால் இந்தி பேசாத நல்லவர்கள் இதயங்களில் ஒரு விரிசல் உண்டாகிவிட்டது. ஏற்பட்டுவிட்ட விரிசலை இனி யாரும் சரி செய்திட முடியாது.

உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரமான குரலில் பரம்பரை ஆண்டி மாநிலமான பீகாரின் இந்தி வெறியர் விபூதி மிச்ரா 'அதற்கென்ன ரூ. 25- கொடுத்தால் தமிழர் இந்தி படித்துவிட்டுப் போகிருர்கள்' என்று சொன்ன திமிரான பேச்சு வடவர்-தென்னவர் உறவிலே விழுந்த வெட்டு! திருப்பிக் கேட்க எவ்வளவு நாழிகை ஆகும், ரூ. 30-கொடுத்தால் இந்திக்காரர்கள் ஆங்கிலம் படித்துவிட்டுப் போகிருர்கள்!' என்று சொல்ல!

## தமிழக நாளிதழ்கள்

இந்த நேரத்தில் தமிழகத்து நாளிதழ்கள்—மித்திரன் நீங்கலாக—நன்ருகவே செய்தி வெளியிட்டன. 'தினமணி'யின் 'கணக்கன்' இந்தி ஆட்சி மொழித் திருத்த மசோதாவை அக்கு வேறு ஆணி வேறு ஆகப் பிரித்து அலசிவிட்டார். திரு. சிவராமன் அவர்கள் தலையங்கம் மூலம் கருத்துச் சொன்னதோடல்லாமல், 'கணக்கன்' கட்டுரைகள் மூலம் நல்ல விளக்கங்களைத் தந்தார். 'இந்து' இதழ் இந்த மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரை நாடாளு மன்ற நடவடிக்கைகளைச் சுவையாக—சூடாக— நுணுக்கமாகக்கூட வழங்கியது. இந்து—மெயில் இதழ்களின் தலையங்கங்கள் தமிழர் உள்ளுணர்வைச் சுட்டிக் காட்டுபவையாக-இந்தி வெறியரின் அக்ரமப் போக்கை மத்திய அரசுக்கு உணர்த்துவனவாக அமைந்திருந்தன. இவை போதா.

இப்போது தமிழகத்து நாடாளு மன்ற உறுப்பினர்கள் 25 பேர் மட்டுந்தான் ஒரு கட்டாக இருந்து

(14-ம் பக்கம் பார்க்க)

# புலவருக்குத் தாலி!

—புலவர் மணிமுடிச்சோழன்—

நாடறிந்த பாண்டியரின் ஆட்சி வீழ்ந்து
நாயகப் பேரரசு முளைத்த காலம்!
சூடழித்து நாடாக்கிக் கழனி கண்ட
கயற்கொடியின் பெருமையெலாம் மாள; சங்க
ஏடறிந்து கொண்டிருந்த கூடல் நாட்டில்
எடுத்தடியை வைத்துவந்தார் தெலுங்க மன்னர்!
நாடறிந்த புலிமறவர் கூடல் நாட்டில்
நாயக்க ராட்சிககு கால்கோள் நட்டார்!

ஆண்டிருந்த உரிமையெலாம் விட்டுவிட்டு
ஆளடிமை யாய்அடங்கி வாழ்தல் மானம்
மாண்டுவிட்ட மனிதருக்கே மகிழ்ச்சி யாகும்!
மான்மான மனிதருக்கோ இழிவு ஆகும்!
பாண்டியரின் நாடாள தெலுங்க நாட்டுப்
படையெடுப்பைக் கண்டிருந்த மதுரை மக்கள்
மூண்டெழுந்தார்! கடலைப்போல் நெருப்பைப் போல
முழுவீரம் காட்டுதற்குப் புறப்பட் டார்கள்!

கொடைமன்னர் வாழ்ந்திருந்த கொங்கு நாட்டின்
குடிமன்னன் போலிருந்தான்! புகழ றிந்த
படைமன்னன் பாண்டியரின் மதிப்பு மிக்க
புலிமறவன் சம்பந்தன்! தெலுங்க வீரர்
உடல்மண்ணை ஆள்வதற்கு உறுதி பூண்டான்!
உயிர்மூச்சுத் தாய்நாட்டை மீட்ப தற்குக்
குடிபடைகள் கொடும்படைகள் கையில் ஏந்தி
கொக்கரித்த தெலுங்கர்படை வீழ்த்தி நின்றார்!

போர்ப்பயிற்சி அறிந்திருந்த மதுரை மக்கள்
பூண்டிருந்த போர்க்கோலம் கேட்டு விட்டு
போர்அதிர்ச்சிஅடைந்துவிட்டான்தெலுங்கமன்னன்
பெரும்படையை நாற்படையை ஒன்றுசேர்த்தான்
போர்ப்படையின் தளபதியாய் சூழ்ச்சி மிக்க
இராமப்ப ஐயரினை தலைமை தாங்கத்
தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தான். பாண்டி மக்கள்
திமிரொடுக்கி அடக்கிவிட மதுரை நோக்கி!

பூவுக்கு மணம்கொடுத்த நாள்மு தல்நற்
புகழுக்கும் பெருமைக்கும் உரிய நாட்டார்
சாவுக்கு அஞ்சாத வீரர் கூட்டம்
சம்பந்த சர்க்கரையின் தலைமை ஏற்று
சாவுக்கு விருந்தளிக்க தெலுங்கர் தம்மை
சவமாக்கிக் கொண்டிருந்தார் வெட்டி வீழ்த்தி!
பாவடிக்கும் புலவருக்குப் பரிசில் நீட்டும்
பழக்கத்தை அறிந்திருந்த கைக ளாலே!

இடிஇடித்து மழைபெய்து ஓய்ந்த பின்பும்
இருக்கின்ற தூவானம் போல வீர
முடிமன்னன் முடிவீழ்ந்த பின்னும் பாண்டி
மறவர்களின் கொடுந்தொல்லை ஓய வில்லை!
கொடிமீனன் குடிபடைகள் கொட்டந் தன்னைக்
குலைத்தொடுக்கி அடக்குதற்கு தெலுங்க வீரர்
படித்தறிந்த போர்ப்பயிற்சி யெல்லாம் காட்டி
பகையொடுக்க முடியாமல் தவித்து நின்றார்!

முக்கனியின் சாற்றோடு தமிழைச் சேர்த்து
மொழியாக்கிப் பேசுகின்ற அறிஞர் கோமான்!
தெக்கணத்தின் திராவிடத்தின் ஒளிவி ளக்கு!
தமிழகத்துப் பண்பாட்டைக் காக்கும் வேந்தன்!
மக்களுள மன்றத்தில் கொலுவி ருக்கும்
மாமேதை பேரறிஞர் அண்ணா போல
சர்க்கரையின் சொல்லுக்கு வேளி ரெல்லாம்
செவிசாய்த்துச் செயல்புரிந்து கொண்டி ருந்தார்!

புறமுதுகு காட்டாத வீரர் கூட்டம்
பெருந்தலைவன் சர்க்கரையை அடக்கு தற்குத்
திறமிகுந்த தெலுங்கர்களை அழைத்துக் கொண்டு
திருடனைப்போல் இரவோடு இரவாய்ச் சென்று
அறமுதுகு காட்டிவிடச் செய்த ஐவர்
அறம்வழுவாச் சர்க்கரையை சிறைபி டித்தான்!
மறப்புலியை சங்கிலிச் சிறையில் வைத்தான்!
மழைமேகக் கொடைக்கையில் விலங்கு மாட்டி!

கொள்ளையிட்டார்! குடிசைகளில் தீயும் இட்டார்!
கேட்டவரை உயிரோடு தோலு ரித்தார்!
கள்குடித்தார்! கன்னியரைக் கற்ப ழித்தார்!
கிள்ளைமொழிப் பிள்ளைகளைக் கொன்றுபோட்டார்!
தொல்லையிட்டுக் கொண்டிருந்த மறவர் கூட்டத்
தளபதியை சிறைபிடித்த மகிழ்ச்சி யாலே!
வெள்ளரிக்காய் வெட்டுகின்ற தெலுங்க வீரர்
வெற்றிவிழா வீரவிழா நடத்தி நின்றார்!

வரிவேங்கை வட்டமிடும் கொடிய காட்டில்
வாழ்ந்திருந்த குமணன்கை வாளை வாங்கி
வரிவாங்கும் உரிமையினை வாங்கித் தந்த
வளர்தமிழப் பெரும்புலவர் மரபில் வந்த
ஒருபுலவர் இதையறிந்தார்! சிறைக்குச் சென்றார்
உள்ளிருக்கும் சர்க்கரையைக் காண்ப தற்கு!
வரிவேங்கை படுத்திருக்கும் குகையைக் காட்டி
வணக்கத்தைசெலுத்திநின்றான்சிறையைகாப்போன்

பகைமுடிக்க வாளேந்தி வந்த கைகள்
பாதாளச் சிறையினிலே இருக்கக் கண்டு
இசைப்பாடல் தமிழ்ப்பாடல் இயற்று கின்ற
இனியதமிழ்ப் பெரும்புலவர் கண்க லங்கி
"குகைவாழும் வரிப்புலியே! அறிவு மாய்க்கும்
கொடும்பசியைப் போக்கிடுக" என்று பாட
புகைபடிந்த ஓவியம்போல் கிடந்த வீரன்
புன்சிரிப்பை மின்னவிட்டு எண்ண லானான்.

"சிறைக்குள்ளே அடைபட்ட என்னைப் பார்த்து
செந்தமிழில் சந்தநடைப் பாட்டுப் பாடி
குறைவேண்டி நிற்கின்றார்! நானோ கைதி!
கொடுத்துபுகழ் தொடுத்துவந்த கொங்கு நாட்டின்
நிறைந்தபுகழ் அறிந்தவரே! தெரிந்தி ருந்தும்
நெஞ்சுருகப் பாடிவிட்டார்! பாடு கின்ற
துறையறிந்த பெரும்புலவர்" என்று எண்ணி
கிளுவைமுள் பனையோலை இரண்டும் கேட்டான்!

படையெடுத்து வந்துநின்ற வறுமைத் துன்பப்
பகையொடுக்க வேண்டிவந்த புலவர்; நல்ல
கொடைக்குடும்ப மறவனிடம் ஓலை, முள்ளைக்
கொண்டுவந்து தந்துநின்றுர்! "மனைவி ளக்கே
அடைபட்டுக் கிடக்கின்றேன்! இருந்த போதும்
அறம்பட்டுப் போகாமல் காக்க வேண்டும்!
மடல்கொண்டு வருகின்ற புலவ ருக்கு
மனம்மகிழப் பொருள்கொடுத்துச் சிறப்பு செய்க!

என்றெழுதி ஓலையினைத் தந்தான் ஈகை
இதயத்தில் குடியிருந்த பெருமை யாளன்!
தன்வறுமை சாவதற்குப் பாடி வந்த
தமிழ்ப்புலவர் ஓலையினை வாங்கிக் கொண்டு
"பொன்னிநதி மணலைவிட நெடிது வாழ்க!
பூந்தமிழின் இதயத்தில் நிலைத்து வாழ்க!"
என்றுமன வாழ்த்தளித்து வணங்கி விட்டு
இதயத்தை மகிழ்ச்சியிலே நீந்த விட்டார்!

மனத்தக்க மாண்புடைய ளாகி வாழ்ந்த
மாதர்குல மணிவிளக்கு! சம்பந் தத்தின்
மனைவியிடம் பனையோலை மடல்கொ டுத்தார்
மாத்தமிழின் கவிப்புலவர்! மங்கை நல்லாள்
துணைவரைந்த மடல்தன்னை இருகை நீட்டி
துள்ளிவந்த மகிழ்ச்சியினுல் கண்ணில் ஒற்றி
இணைமீனை எழுத்துகளில் மொய்க்க விட்டாள்!
ஏக்கபெரும் மூச்சதனை நெஞ்சி லிட்டு!

பெண்குலத்துப் பொன்விளக்குத் தந்த தாலிப்
பெரும்பரிசில் வாங்கிவந்த புலவர், கூடல்
மண்ணுண்டு கொண்டிருந்த தெலுங்க ருக்கு
மறக்குலத்துப் பெருமையினை எடுத்துக் காட்டி
கெண்டைமீன் கொடியாளும் உரிமை தன்னை
கிடைக்கும்படிச் செய்துவிட வேண்டு மென்று
கண்ணிரண்டைக் கடலாக்கிக் கொண்டு நல்ல
காலத்தை எதிர்நோக்கிக் கொண்டி ருந்தார்!

கால்நடைகள் காட்சியினைக் காண்ப தற்குக்
காங்கேயம் சென்றிருந்தார் தெலுங்கர் ஆட்சி
கால்கொண்டு நிலைத்திருக்க வைத்த ஐயர்!
கட்டழகு மனைவியுடன் வந்தி ருந்தாள்!
நாள்பார்த்துக் கொண்டிருந்த புலவர், காளை
நலம்பார்த்துக் கொண்டிருந்த ஐய ருக்கு
நூல்வடிக்கும் கையாலே தாலி தன்னை
நல்லுறையாய்க் கையுறையாய்த் தந்து நின்றுர்!

"யார்தாலி இத்தாலி?" பதைப தைத்து
இராமப்ப ஐயருளம் துடிக்கக் கேட்டார்!
"கார்மேகக் கொடைக்குடும்பக் கொங்கு நாட்டுச்
சர்க்கரையின் மனைவிளக்குத் தந்த" தென்றுர்.
பார்புகழும் தமிழ்ப்புலவர்! "சிறையி ருக்கும்
போர்மறவன் சம்பந்தம் இருக்கும் போது—"
நீர்விழியில் குவித்தபடி ஐயர் கேட்டார்!
நெஞ்சத்தில் வியப்புக்குறி நெளிய விட்டு!

நிலபுலன்கள் பொன்மணிகள் எல்லாம் வந்த
நாயக்கர் கைப்பற்றிக் கொண்டு சென்றுர்!
நலங்கெட்ட வளங்கெட்டச் செய்தி எல்லாம்
நல்விதயம் கொண்டவர்க்குத் தெரிந்தி ருந்தால்
புலவருக்குச் சிறப்பான பரிச ளிக்கப்
பனையோலை மடலெடுத்து இருக்க மாட்டார்!
'இலமென்று' வந்தவற்கோ இல்லை யென்றல்
ஈகைக்குச் சிறப்பில்லை! அழகு மில்லை!

கற்புநெறி வழுவாதப் பெண்கு லத்தின்
காப்புநெறி கணவன்சொல் காத்து வாழ்ந்த
பொற்செல்வி சர்க்கரையின் மனைவி ளக்கு
பொற்சரட்டில் கோத்திருந்த தாலி தன்னை
நற்பரிசி லாகத்தமிழ்ப் புலவ ருக்கு
நகைமுகத்தில் மின்னலிட கொடுத்து நின்றுள்!
கற்றறிந்த தமிழ்ப்புலவன் கண்ணீர் முத்தை
கன்னத்தில் மின்னவிட்டு ஏற்றுக் கொண்டார்!

கொடிமுல்லைக் கொடிபடரத் தேர்கொ டுத்தான்
கொடைவள்ளல் பறம்புமலைத் தலைவன் பாரி!
இடிமேகம் பார்த்தாடும் மயிலுக் காக
ஈந்துவந்தான் போர்வையினை நல்லூர்ப் பேகன்!
கொடும்புலிகள் கொட்டமிடும் காட்டில் வாழ்ந்த
கொடைக்குமணன் தலைகொடுத்து!கனிகொடுத்து
கொடைவள்ளல் பெயர்பொறித்தான் அஞ்சி! ஈகை
காணுத வரலாறு! தாலி தந்தாள்!

"ஈத்துவக்கும் பண்பறிந்த குடிபி றந்து
இல்லறத்தின் நல்லறத்தின் புகழ்வ ளர்த்துக்
காத்திருக்கும் பழக்கத்தால் எனது கையில்
கொங்கர்குலக் கொடைசிறக்கத் தாலி தந்தாள்
கோத்திருந்த பொற்சரட்டுத் தாலி யன்றி
கொடுப்பதற்குப் பொருள்வேறு அற்ற தாயே!
மாத்தமிழின் நாடாளும் உம்மைக் காண
மதிப்புமிகுக் கையுறையாய்—" புலவர் சொன்னுர்

உயிருக்கு ஊதியமாம் ஈகை! அந்த
உயர்நெறியை அறிந்திருந்த கொங்கு நாட்டார்
உயிர்மூச்சுத் தமிழுக்குக் கொடைகொ டுத்து
உயர்ந்தபுகழ் உச்சியிலே வாழு கின்றுர்!
உயர்பண்பு நெறிவாடி நிலைத்து வாடி
உள்ளிருக்கும் சர்க்கரையை விடுவிப் பேன்நான்
மயிர்மான மான்மானத் தமிழ கத்தில்
மலர்ந்திருக்கும் ஆட்சிக்குத் துணையாய் நிற்க!

என்றுரைத்தார் இராமப்ப ஐயர் பாட்டு
இதயத்தின் தமிழ்ப்புலவர் ஒப்புக் கொண்டார்!
அன்றுமறு நாளேநல் விருந்த ளித்தான்
அடலேறு சர்க்கரைதன் மனைவி யோடு
கன்னித்தமிழ் புலவரோடு வந்தி ருந்தான்.
களித்திருந்தார் அவைநடுவே தாலி தன்னை
மின்னலிடை மனைவிக்குக் கட்டி நின்றுன்!
மலைமார்பு சர்க்கரைக்கு வாழ்த்தொ லிக்க!

# வேண்டாம் வாழ்வே!

—[ எம். முருகன் ]—

சிட்டுஇளஞ் சிட்டுஎனை மணமு டித்து
சிறப்புமிகச் சிறப்புஎனும் வாழ்வு நல்கி
மொட்டுஇள மொட்டுஇதழ் விரிக்கத் தேனை
மொண்டுமிக மொண்டுஉடன் உண்ணும்
வண்டாய்

தொட்டுஉடல் தொட்டுவிளை யாடி ஆடி
சுவைத்துஇதழ் சுவைத்துமிக சுகத்தில் ஆழ்த்தி
விட்டுஎனை விட்டுநீர் பிரிந்தே போனீர்,
வேகும்உளம் வேகும்இனி வேண்டாம் வாழ்வே!

மெத்தைசிறு மெத்தைவிரி கட்டில் மீதில்
மேவிமிக மேவிஎனை அணைத்துக் "கண்ணே,
முத்தம் ஒரு முத்தம்கொடு முத்தம்!" என்று
முன்னம்இதன் முன்னம்எனைக் கொஞ்சிக்
கொஞ்சி

தத்தைபசுந் தத்தைகனி கொத்தும் வண்ணம்
தழுவிமனைத் தழுவிசுகம் தந்தீர்! ஆனுல்
முத்தாம்ஒளிர் முத்தாம்எனை மறந்தீர் இன்று
மூளும்துயர் மூளும்இனி வேண்டாம் வாழ்வே!

# கலைச் சொல்லாக்கம்

[ நாஞ்சில் செ. சுந்தரராசன், பி இ., எம். இ. ]

மாந்தன் தோன்றும்போதே அறிவு மிக்கவனும் ஆற்றல் நிரம்பியவனும், நாகரிகம் முதிர்ந்தவனும் தோன்றவில்லை. உறுப்புக் குறிப்பு மூலம் தன் எண்ணத்தை அயலானுக்கு வெளியிட்ட முதல் மாந்தன், பின்னர் ஓசைமூலம் தன் கருத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளக் கற்றுக்கொண்டான். நாட்செல்லச் செல்ல அவனது அறிவைப்போலவே, மொழித்திறனும், விரிந்துபட்டது. தான் கண்டதையும், கேட்டதையும் விரித்துரைக்கத் தலைப்பட்டான். இயற்கையெனும் இன்பத் தேன் துளியுடன் கற்பனையெனும் கருப்பஞ்சாறு கலந்து இலக்கியமெனும் அமிழ்து படைத்தான். அறிவின் முதிர்ச்சி கண்டவற்றுக்கெல்லாம் காரணம் கேட்கத் தொடங்கியது. இதன் விளைவே அறிவியற்றுறை, (Science) கண்டவற்றுக்குக் காரணம் கற்பித்ததுடன் நின்றுவிடவில்லை அவன். அறிவியலெனும் தோட்டி (அங்குசம்) மூலம், இயற்கையெனும் களிற்றினை அடிமைப்படுத்த முனைந்தான். இதுவே பொறியியற்றுறை (Engi eering)யின் தோற்றம்.

மக்களிடையே கருத்துக்கள் பெருகி, புதியதுறைகள் வளர, வளர மக்களின் கருத்தைத் தொடர்ந்து செல்லும் தன்மைத்தான மொழியும் விரிவடைகின்றது; துறைதொறும், துறைதொறும் புதுச் சொற்களும் பிறக்கின்றன. இங்ஙனம் அறிவியல், பொறியியல் துறைகளில் பிறக்கும் சொற்களே கலைச்சொற்கள் (Technical Terms) எனப்படும்.

தமிழில் கலைச்சொற்களை ஆக்கும் முயற்சி இன்று நேற்றன்று, ஏறத்தாழ கால் நூற்றாண்டாகவே நடைபெற்று வருகின்றது. தமிழின் நலனில் நாட்டங்கொண்டு அந்நாளில் அயராதுழைத்த "சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கம்" கலைச்சொல்லாக்கக் குழுவொன்று நிறுவி, கலைச்சொல் லாக்க மாநாடு நடாத்தி (20—9—1936) இத்துறையில் போற்றற் குரிய பணிசெய்தது. அந்நாளிலேயே மூதறிஞர் இராசாசி கலைச்சொல்லாக்கம்பற்றிக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அன்றும், இன்றும் செந்தமிழ்ச் செல்வி, தென்மொழி, கலைக்கதிர் ஆகிய தமிழ்த் திங்களேடுகள் அறிவியற் கட்டுரைகள் வெளியிட்டு நவிலற்கரிய நற்பணி செய்து வருகின்றன. கல்லூரியிலும் கன்னித் தமிழிலேயே கல்வி கற்க வேண்டுமென்ற விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளமையின், தண்டமிழில் கலைச்சொல்லாக்க வேண்டியதன் தேவை மிகைப்பட்டுள்ள இந்நிலையில், கலைச் சொல்லாக்கம்பற்றிய சில அடிப்படையான கருத்துக்கள் இக் கட்டுரையின் கண்ணே விளக்கப்படுகின்றன.

புதிய கருத்துக்கள் பரவும்போது புதிய சொற்கள் பிறக்கின்றன என்று முன்னரேகண்டோம். அவை பிறத்தல் இருவகையாம், ஒன்று, கருத்துக்கள் எந்த மொழியாரிடமிருந்து வந்தனவோ அந்த மொழியின் சொற்களையே நம் மொழியின் பண்புக்கேற்பத் திரித்து வழங்குதல். (எ—கா) சைக்கிள், மோட்டார். மற்றொருவகை, கருத்துக்கள் பரவும்போது அவற்றைக் கற்கும் மக்கள் தம் மொழியிலிருந்தே அதற்கேற்ற சொற்களை ஆக்கிக்கொள்ளுதல். (எ—கா) வானொலி, வானவூர்தி.

> உலகத் தமிழ் மாநாடு நடைபெற விருக்கும் இந்த வேளையில் இது போன்ற ஆராய்வுக்கட்டுரைகளை வெளியிடுதல், தமிழாராய்வோர் அனைவர்க்கும் பயன்தருமென்றே இதனைப் படைக்கிறோம்.

தமிழில் கலைச்சொல்லாக்கும் அறிஞர்களிடையேயும் இதுபோன்று இரு வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஆங்கிலத்திலுள்ள கலைச் சொற்களை அவ்வாறே பயன்படுத்தலே ஏற்புடையதென ஒரு சாராரும், கன்னித் தமிழிலேயே காரணங் கருதி கலைச் சொற்களாக்கப்படல் வேண்டுமென மற்றொரு சாராரும் கருதுகின்றனர். இவ்விரு கருத்துக்களையும் சற்று விரிவாக நோக்குவோம்.

ஆங்கிலக் கலைச்சொற்களை அவ்வாறே பயன்படுத்த வேண்டுமெனக் கருதுவோர், "தமிழில் புதிதாக ஆக்கும் கலைச்சொற்கள் மாணவர் மனதிற் பதிதல் கடினமெனக்" கூறிச் செந்தமிழின் செம்மாந்த நடைக்கு முட்டுக்கட்டைபோட முயலுகின்றனர். இவர்களது கூற்றுக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னமேயே, தொல்காப்பியர்,

"கடிசொ லில்லை காலத்துப்
படினே"

(தொல்—எச்சவியல் 56)

என விடைகூறிப் போந்தார்.

மேலும் அவ்வப்போது தோன்றும் புதுச்சொற்களைத் தழுவிக்கொள்ள வேண்டுமெனும் விதியைக் கூறும் வேறொரு தொல்காப்பிய நூற்பா,

"குரங்கின் ஏற்றினைக்
கடுவன் என்றலும்,
மரம்பயில் கூகையைக்
கோட்டான் என்றலும்,
செவ்வாய்க் கிளியைத்
தத்தை என்றலும்,
வெவ்வாய் வெருகினைப்
பூசை என்றலும்,
குதிரையுள் ஆணினைச்
சேவல் என்றலும்,
இருள்நிறப் பன்றியை
ஏனம் என்றலும்,
எருமையுள் ஆணினைக்
கண்டி என்றலும்,
முடிய வந்த
அவ்வழக் குண்மையின்
கடிய லாகா
கடனறிந் தோர்க்கே"

(தொல்—மரபியல் 69)

இந்நூற்பாவில் வரும் கடுவன் (—கடுமையானது), கோட்டான் (—கோட்டில்—கிளையில் வசிப்பது), தத்தை (—இலை, காய், கனியொடு தத்தி வாழ்வது), முதலிய எல்லாச் சொற்களும் காரணங் கருதிவந்தனவாகும். இவ்வாறு காரணம் கருதி வந்த அவ்வக்காலத்துப் புதிய சொற்களைக் கடிதென ஒதுக்கலாகாதென்பதே தொல்காப்பியரின் கருத்து. இஃது இந்நாளில் புதிதாக ஆக்கப்படும் கலைச்சொற்களுக்கும் சாலப் பொருந்தும்.

'யூனிவர்சிடி' (University) என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் 'சர்வகலாசாலை' எனும் வடசொல்லைப் புழங்கிவந்த நாம், அதனை விடுத்து "பல்கலைக் கழகம்" என்ற தூய தமிழ்ச் சொல்லைக் கூறிய போது, முதலில் நாவுக்குச் சற்றே புளித்ததேனும், இன்று அது செவிக்கினிமை பயக்கவில்லையா? 'பிரசங்கம்' என்ற சொல்லைச் "சொற்பொழிவு" என்று தமிழாக்கியபோது நகைத்த நாவே. இன்று அதனை வழங்கவில்லையா? இதுபோலப் புதிதாய் பிறக்கும் தூய தமிழ்க் கலைச் சொற்களும் காலப் போக்கில் பழக்கமாகிவிடும் என்பது தெளிவு.

மேலும் தாய்மொழியின் வேர்ச் சொற்களினின்று உருவாகும் கலைச் சொற்கள், மாணவர்க்கு எளிதில் விளக்கமளிக்கும் என்பது வெள்ளிடைமலை. காட்டாக, 'டர்பைன்' (Turbine) என்ற சொல்லைக் கேட்டுத் திகைக்கும் மாணவன் "சுழலி" எனக் கூறினுல் எளிதிற் புரிந்து கொள்வானேயன்றே?

இனிக் கலைச்சொற்களை ஆக்கும் வழிவகைகளைச் சற்று விளக்கமாக நோக்குவோம்.

(க) பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இன்று நாட்டுப்புற மக்களிடையேயும் நிலவும் கலைச்சொற்களைத் தொகுத்து வழங்கல்:

பண்டைத் தமிழ் இலக்கியங்கள் நம் முன்னேர் விட்டுச் சென்ற கருத்துக் கருவூலங்களாகும். "அறிவியற்றுறை" எனத் தனியாகப் பகுத்து நூற்கள் எழுதாவிடினும், இலக்கியத்தினூடேயே பல அறிவியற் கருத்துக்களை அள்ளி விதைத்துள்ளனர். கழக (சங்க) நூற்களையும், சித்தர் பாடல்களையும் ஆய்ந்து, அவற்றிற் சிதறிக்கிடக்கும் அறிவியற் கருத்துக்களையும், கலைச் சொற்களையும் திரட்டும் பணி தமிழ்ப் புலவர்க்குரியதாம்.

தூய தமிழ்ச் சொற்கள் பல' இன்று நகர்ப்புறத்தே போலி நாகரிகத்தின் பயனுய் வழக்கிழந்துவிட்டாலும், நாட்டுப்புற மக்களிடையே நின்று நிலவி வருவதைக் காணலாம். காட்டாக, "எண்" என்ற (Centre of Gravity) ஓரசைச்சொல் கம்மியரிடையேயும் !"விட்டம்" அல்லது "உத்திரம்" (Beam), "எலியோடி" (Bresummer), "கை" (Rafter), 'பட்டியல்" (Reaper) முதலிய கட்டிடவியல் தொடர்புடைய கலைச்சொற்கள் நாட்டுப்புறத்துத் தச்சரிடையேயும் (Car enter) வழங்கி வருகின்றன. மறைந்து வரும் தூய தமிழ்ச் சொற்களைத் திரட்டி வெளியிடும் பணியில் 'தென்மொழி" எனும் தனித் தமிழ் இலக்கியத் திங்களிதழ் ஈடுபட்டுள்ளமை போற்றற்குரியதாகும்.

(உ) புதிதாகத் தூய தமிழில் கலைச் சொற்களை ஆக்குதல்:

"வீட்டிலே வெண்ணெய் வைத்துக் கொண்டு வெளியிலே நெய்க் கலைகிருற்போல்," உயர்தனிச் செம்மொழியாம் தமிழின் சொல் வளத்தை விடுத்து, அயல் மொழிச் சொற்களைக் கடன் வாங்குவது நமது முயற்சியின்மையையே குறிக்கும். ஆதலின் சோம்பலை விடுத்துச் செந்தமிழின் செம்மாந்த வருங்காலத்தை யெண்ணி தண்டமிழிற் கலைச் சொற்களாக்குவது நம் கடனேயாம்.

புதிய சொற்களின் ஆக்கமுறையை நான்காகப் பகுக்கலாம்.

(அ) காரணம் கருதி வேர்ச்சொற்களினின்று ஆக்குதல்.

(ஆ) மூலமொழியில் அச்சொல்லின் கருப்பொருள் கண்டு அது போலத் தமிழிலும் ஆக்குதல்.

(இ) இரு சொற்களை இணைத்துப் புதியதொன்றை ஆக்குதல்.

(ஈ) ஒப்பாய்வு (Analogy) மூலம் ஆக்குதல்.

(அ) காரணங் கருதி வேர்ச்சொற்களினின்று ஆக்குதல்:

தமிழிலுள்ள சொற்கள் யாவுமே' தூய தென் வேர்ச் சொற்களினின்று (Root)பிறந்தனவாகும். அடிப்படையான ஒரு பொருளினைக் குறித்து நிற்கும் வேர்ச் சொல்லொன்றிலிருந்து பல நூறு சொற்கள் புதிதாய்ப் பிறக்கின்றன.

[காட்டாக. "'முல்"—இளமையை (சிறுமையை)க் குறிக்கும் வேர்ச் சொல்] இதிலிருந்து,

முல்—முல்லை (சிறிய பூ),

மூல்–முன்–முனி (யானைக் கன்று).

முல்–முள்–முளை (இளங்குருத்து),

முல்-முள்-மள்-மழவு (குழந்தை).

.........இன்னும் பல.]

இதுபோலவே வேர்ச் சொற்களினின்று பல நுட்பமான கலைச் சொற்களை ஆக்க முடியும். காட்டாக 'மின்" ஒளியைக் குறிக்கும் வேர்ச் சொல், புதிதாக மின்சாரத்தின் பயனுய் (Electricity) விளக்கெரிவதைக் கண்ட தமிழன், இஃது ஒளிக்கு மூலமானது எனப் பொருள் பட, "மின்சாரம்" (மின்—சாரம்) என்ற தமிழ்ச் சொல்லை ஆக்கினுன்,

(ஆ) மூல மொழியில் அச்சொல்லின் கருப் பொருள் கண்டு. அது போலவே தமிழிலும் ஆக்குதல்:

எந்தச் சொல்லைத் தமிழாக்க முனைகின்ருேமோ, அச்சொல் மூலமொழியில் எவ்வேர்ச் சொல்லினின்று பிறந்ததென்றறிந்து அதற்கீடான (அதே கருப்பொருளுடைய) தமிழ் வேர்ச் சொல்லை யொட்டி புதியதொரு கலைச் சொல்லை ஆக்கிக் கொள்ளுதல். (நேரடி சொற்பெயர்ப்பு). காட்டாக, "Fl w" (பாய்தல்) என்ற வேரினின்று பிறந்தது "Fluid" எனும் ஆங்கிலச் சொல். ஆதலின், 'Fluid" என்பதற்கீடாய், "பாய்" (Flow) என்ற வேரினின்று "பாய்மம்" என்ற சொல்லை ஆக்கிக் கொள்ளலாம்.

[மாருக 'மின்சாரம்" எனுந் தமிழ்ச் சொல் "மின்" (ஒளி) என்ற வேரினின்றும், அதற்கிணையான. "Electricity" எனும் ஆங்கிலச் சொல், வேறுபட்ட கருப் பொருளுடைய "எலக்ட்ரான்" (Electron)–அம்பரைக் குறிக்கும் கிரேக்கச் சொல்) எனும் வேரினின்றும் பிறந்தனவென்பதைக் காண்க.]

(இ) இரு சொற்களை இணைத்துப் புதியதொன்றை ஆக்குதால்:

கரியும் (Carbon), தீயதையும் (Oxygen) இரு வேறு தனிமங்கள். (Elements) இவையிரண்டும் வேதிவினைப்பட்டு இணைத்தால் "கரியிரு தீயதை (Carbon — di — oxide) என்ற புதியதொரு கூட்டுப்பொருள் உருவாகிறது. இதைப் போலவே நமக்குத் தெரிந்த இரு சொற்களை இணைத்துப் புதிய பொருளொன்றைக் குறிக்கும் சொல்லை உருவாக்க முடியும். காட்டாக, புகையைக் கக்கிக்கொண்டு, தண்டவாளம் வழி ஓடியதொரு வண்டி. "புகை", "வண்டி" இரண்டும் ஏற்கனவே தெரிந்த சொற்கள், இதினின்று "புகை வண்டி" என்ற சொல் பிறந்துவிட்டது.

(ஈ) ஒப்பாய்வு மூலம் உருவாக்குதல்;

நமக்குத் தெரிந்த பொருளொன்றுடன், முகாமையான வேற்றுமை யாதுமின்றி ஏறத்தாழ அதே பண்பு

களுடைய (Having points of resemblance with no crucial difference) புதியதொன்றை ஒப்பிட்டு ஆய்வதே ஒப்பாய்வு. (Analogy). அறிவியல் (Science), பொருளியல் (Economics), மெய்யறிவியல் (Philosophy) ஆகிய துறைகளில் பெரும்பயன் விளைத்துள்ள இக்கருவியைக் கலைச் சொல்லாக்கப் பணியிலும் பயன்படுத்தலாம். காட்டாக, மின்சாரமும் நீரும் பல பொதுப் பண்புகளுடையன. நீரை நாம் தொன்று தொட்டே நன்கறிவோம். அது தொடர்புடைய பல சொற்களுமிங்குள. ஆதலின், தமிழத்துக்குப் புதியதான மின்சாரத்தைப் பற்றிய புதுச் சொற்களை உருவாக்குமிடத்து நீர்—மின்சார ஒப்பாய்வை''க் கருத்திற்கொள்ளலாம், காட்டாக. நீரைச் சேமித்து வைக்கும் பாத்திரத்தை "நீர்க்கலம்" என்கிறோம். இது போலவே மின்சாரத்தைச் சேமித்து வைக்கும் 'பாட்டரி'யை (Battery) மின்கலம் எனலாம். இது போலவே 'வால்டேச்'' (Voltage) என்பதைக் குறிக்கும் ''மின்னழுத்தம்'' என்ற சொல், ''நீரழுத்தம்'' (Water Pressure) என்பதை யொட்டிப் பிறந்ததாகும்.

(3) உலகப் பொதுக் கலைச் சொற்கள் சிலவற்றைச் சிறப்புக் கலைச் சொற்களாக ஏற்றுக்கொள்ளுதல்:

எந்தவொரு விதிக்கும் சில தளர்த்தல்களும் இருப்பதுபோல் தூய தமிழ்க் கலைச் சொற்களையே ஆக்க வேண்டும் என்ற முயற்சியிலீடுபட்டுள்ள நாமும், ஒரு சில இன்றியமையாவிடங்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய சில 'உலகப் பொதுக் கலைச் சொற்களை'' (International Technical Terms) தமிழ் மொழியின் பண்புக் கேற்பத் திரித்துச் ''சிறப்புக் கலைச் சொற்களாக'' வழங்கலாம். காட்டாக, கணிதவியலில் (Mathematics) வழங்கும். ''சைன்'' (Sine) ''கொசைன்'' (Cosine) முதலிய கலைச் சொற்களை அவ்வண்ணமே வழங்கல் ஏற்புடைத்தாம்.

இவ்வண்ணம் ஏற்கும் சிறப்புக் கலைச் சொற்கள் ஒவ்வொரு துறையிலும் விரல்விட்டு எண்ணக்கூடியனவாகவே இருத்தல் வேண்டுமென்பதில், கலைச் சொல்லாக்கப் பணியிலீடுபடும் அறிஞர்கள் கண்டிப்புடன் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

பாறையினின்று பெயர்த்து வரும் கற்களைக் கொண்டு கட்டிடம் கட்ட முனையும் கட்டிட வினைஞன், கற்களைத் தான் தட்டும் கட்டிடத்தின் தன்மைக் கேற்பச் சீர்ப்படுத்துதல் போலப் பிறமொழிச் சொற்களைச் சிறப்புக் கலைச் சொற்களாய் வழங்குமிடத்து, அவை தமைத் தமிழ் வடிவில் சீரமைத்துக் கொள்ளல் வேண்டும். மொழி முதலிலும், இறுதியிலும் நிற்றற்குரிய எழுத்து இவையாமெனவும் இன்ன, இன்ன எழுத்துக்கள் முன்னர் இன்ன, இன்ன எழுத்துக்கள் மயங்காவெனவும் இலக்கண நூலாசிரியர் வகுத்துக் காட்டியுள்ளனர். அவர் ஆராய்ந்தமைத்த விதிகட் கிசைவாகச் சொற்களை ஆக்கிக் கொளல் முறையாகும்.

காட்டாக 'ல'கரம் மொழிக்கு முதலில்வரலாகாதாதலின், Logarithm என்ற ஆங்கிலச் சொல்லை ''லாகரிதம்'' என்றெழுதாது ''இலாகரிதம்'' என்றே எழுதவேண்டும்,

'கலைச் சொல்லாக்கம்'' பற்றிய அடிப்படையான கருத்துக்கள் சிலவற்றை மேலே கூறினம். இத்துறையில் மேலும் ஆழ்ந்து ஆராய்ந்து, இதுபற்றித் திட்டமான கொள்கைகளை நிறுவுமாற்றான் தமிழக அரசு அறிவியல் அறிவு மட்டுமன்றி, ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், அடிப்படையான மொழியியல் அறிவும்—குறிப்பாகச் சொல்லாக்கத் திறனும்—உடைய பல்வேறு துறை அறிஞர்களைக் கொண்ட ''கலைச் சொல்லாக்கக் குழு''வொன்றை அமைக்க வேண்டும். இவர்கள் ஆக்கும் கலைச் சொற்களைக் கல்வி நிறுவனங்களிலும் ஆய்வுத் துறைகளிலும், தொழிற் கூடங்களிலும் பணி பாற்றும் அவ்வத் துறை அறிஞர்களின் பார்வைக்கனுப்பி, அவர்களின் திருத்தங்களையும் பெற்றுக் ''கலைச் சொற் தொகுப்பொன்று'' வெளியிடவேண்டும். அறிவியற் கட்டுரை யெழுதுவாரும் தம் தம் விருப்பப்படி ஆளுக்கொரு வகையான கலைச் சொற்களைப் பயன்படுத்துவதை விட்டு ஆங்கிலத்திலுள்ளது போல யாவரும் ஒரே சீராக இத்தொகுப்பிலுள்ள கலைச்சொற்களையே பயன்படுத்த முன்வர வேண்டும்.

இவ்வண்ணம் துறைதொறும், துறைதொறும் கலைச் சொற்கள் பெருகிச் சிறப்பான 'அறிவியல் நூல்கள்' தமிழில் எழுந்தால் தமிழின் மணம் இத்தரையெங்கும் பரவும். ''செம்மைப் பூவடியில் சிலம்பொலித்திடச் சின்னச் சிற்றிடையில் மேகலை மின்னிட, அழகுக் கழுத்தில் வற்றாக் கற்பனை ஊற்றாகிய கம்பன் காவியமும், செம்மைச் சைவர் சேக்கிழார் பெருநூலும் மணிகள் பதித்திட்ட மார் பதக்கமாய் இலங்கிட, வண்ண மார்பில் தொகையும் பாட்டும் தூய மணிமாலையாகத் துலங்கிட, நெற்றி நாப்பண் சிந்தாமணியெனும் நந்தா விளக்கொளிர்ந்திட, கொவ்வைச் செவ்வாயில் குறள் முத்துகள் உதிர்ந்திட, வண்ணச் சிறுகையில் வரிசையுறு சிற்றிலக்கியம் காழ் மணி (வைர) வளையலாய் ஆர்த்திட'' அரசோச்சிய தமிழன்னை, விளங்கியல் வேதியியல் உயிரியல், பொருளியல், பொறியியல், இன்ன பிற துறைகளையும் வென்று பேரரசியாய் அரியணை ஏறிடுவாள். அறுந்தது தளை; பிறந்தது விடுதலை, நிறைந்தது புதுமலர்வு எனத் தமிழ்த்தாய் சிறப்பது உறுதி!

●

## மறு பரிசீலனை தேவை!

ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் நிறைவேறி விட்டபோதிலும். அதில் சில மாற்றங்களைச் செய்ய நாடாளு மன்ற தி. மு. க. குழு மீண்டும் புதுமுயற்சி எடுத்துள்ளது. இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமும், தீர்மானமும் எங்கள் கட்சிக்கு ஏற்புடையவை அல்ல, பொதுமக்களுக் கிடையே, இம்மசோதா பற்றி ஏற்பட்டுள்ள கருத்தினையும், காமராசர் இது குறித்து வெளியிட்டுள்ள கருத்தினையும் மாநிலங்களவை உறுப்பினர்கள் மனதிற் கொள்ளவேண்டும். இப்போதும் காலங் கடந்து விடவில்லை. அனைத்துக் கட்சித் தலைவர்களையும், நீதித் துறையினரையும், கல்வித் துறையினரையும் அழைத்து, தலைமை யமைச்சர் மாநாடு கூட்டலாம்.

— நாஞ்சில் கி. மனோகரன்.

“பசுபதி, பார்வதி மணாளா, அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியின் கணவா, அம்பாளுடன் இணைந்த சிவனே! முக்கண்ண மகாதேவா, ஆறுமுகனின் தந்தையே! இதோ உன்னுடைய பக்தன் சாதாரண புண்ணியகோடி! வீடும், நிலமும் வாசலும் இழந்து வந்திருக்கிறேன்! வாழ எவ்வளவோ முயன்றேனே! ஈஸ்வரா......அழுகிறேன்! என்றால், இந்தப் பொல்லாத உலகில் வாழ முடியவில்லை! அ...க்கு அருள் புரியும் சம்போ! தருமி...ப் பொற்காசுகள் வழங்கிய ஆலவாய் அழகா, சொக்கநாதக் கடவுளே! மீனாட்சி சுந்தரரே...இதோ உமக்காகப் படைத்திருக்கிறேன் பழங்கள்! அந்தக் காலமாக இருந்தால் முதலிலே, பாலிலே உன்னை நீராட்டியிருப்பேன்; ஆனால் இந்தக் காலம் என்னை ஆண்டியாக்கி விட்டது. அனாதையாக்கி விட்டது. என்ன செய்வேன்? புண்ணியகோடி புனர்வாழ்வு வாழ உன்னாலன்றி வேறு யார் உளர் தெய்வமே...” புண்ணியகோடி கண்ணீரை மழையெனக் கொட்டுகிறார்.

எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் என்று அவர் நம்பியிருக்கும் அந்த மகாதெய்வம் பேசவில்லை! மூன்றாவது கண்ணைத் திறந்து புண்ணியகோடிக்கு வாழ்வளிக்க வராதவர்களை எரித்துவிடுவேன் என்று சொல்லவில்லை! அருகில் அவனுடைய மனைவியென்று கூறப்படும் உண்ணாமுலையாவது தாளாத துயரத்தைக் கொட்டிய புண்ணியகோடிக்கு, ‘அருள்புரிவாய் நாதா’ என்று கூறவில்லை!

அடுத்தடுத்து இருக்கும் அவருடைய திருக்குமாரர்கள் புண்ணியகோடியை ஞானப் பார்வையின் மூலம் அறிந்தவர்களாயிற்றே! “அப்பா கொழுக்கட்டைகளைப் படைத்து என்னையும், என் மூஷிகத்தையும் திருப்தி செய்கிறவனப்பா! இவனைக் காப்பாற்றுங்கள்!” என்று கூறவில்லை தும்பிக்கையான்!

அடுத்துள்ள குமாரனுடைய ஆறு தலைகளிலுள்ள பனிரெண்டு விழிகள் புண்ணியகோடியைக் கண்டதனால் ‘தந்தையே புண்ணியகோடி என்னுடைய திருக்கல்யாண விழாவினைச் செய்வதென்றால் மிகவும் மகிழ்பவன்! அந்தக் காலத்தில் அவன் நடாத்திய மணவிழாக்களுக்குப் பிரதியுபகாரமாக உதவுங்கள்!” என்று கூறவில்லை!

எங்கேயோ உட்கார்ந்துக்கொண்டிருந்த ஐயப்பனுக்குச் சிரிப்பு வந்து. “என்னைப் பெற்ற பெருமைக்குரியவரே பணமிருக்கும்போது எத்தனை நாட்கள் பட்டினியிருந்தான் தெரியுமா? இன்று பணமில்லாமல் பட்டினியிருக்கிறான்! ஆகவே கருணை காட்டுங்கள்!” என்று கூறவில்லை.

ஏன்?

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த அந்த கடவுளுக்கு இரக்கம் சுரக்கவில்லை! ஏனென்றால் அவர் மனிதரல்ல! இரண்டாவது மொழி தெரிந்தவரல்ல! மூன்றாவது எதையும் ‘யாரும் வேண்டுவார்கள் அதற்காக நான்’ என்று கற்பனைப் படுத்தினார்களே அவர்கள்மீது பழி சுமத்தத் தெரியாவிட்டாலும், அந்தப் பழிக்காக அழ அவருக்குக் கண்களேயில்லை!

# பிரிந்தவர் கூடினால்....

— [ஈ. எஸ். பட்டப்பா ]—

அந்தோ புண்ணிய கோடி!

நீரும், நிலமும், வீடும் நீண்ட சுகமுடன் வாழ நிறைசெல்வமும் பொதுவாக மனித வாழ்க்கைக்குத் தேவையானவைகள்.

“உமக்கு நிலம் இருக்கிறதா?”

“ஓ இருக்கிறதே!”

“ஆமாம் நன்செயா, புன்செயா?”

‘இரண்டும் சேர்ந்துதான்!”

“ஓகோ! நன்செய் நிலத்தில் கிணறு இருக்கிறதா அல்லது ஏரிப் பாய்ச்சலா?”

“ஏரிப்பாய்ச்சல் நிலம், ஆற்றுப் பாய்ச்சல் நிலம், கிணறுள்ள பூமி, இருக்கிறது!”

இப்பொழுது வினாக்களைத் தொடுத்தவருக்கு அந்த நிலக்கிழார் மீது அன்பு பிறக்கிறது.

“சொந்தமாக வீடு இருக்கிறதா சார் உங்கட்கு?”

‘இருக்கிறதே!”

“ஓகோ!”

‘சிலவுகள் இருக்கத்தானே ஐயா செய்கிறது. கொஞ்சம் சேமித்தும் வைத்திருக்கிறேன்!”

“ஆமாம் நாளைக்கு மகள்கள் கலியாணங்கள், பிள்ளைகளின் படிப்பு இப்படி ஏதாவது ஒன்று: பிரச்சனையாக எழக்கூடியதுதானே!”

‘நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மைதான்!”

“விடைபெறட்டுமா?”

‘காபி சாப்பிட்டுவிட்டுப் போங்கள்! பெரிய நகரத்தில் இருப்பவர்கள்! ஏதோ எளியவன் வீட்டு உபசரணை!”

“பரவாயில்லை! இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன்!”

“அப்படித்தான் சொல்வீர்கள்! நம் வீட்டில் கொஞ்சம் பலகாரம் செய்தால்தான் எனக்கு ஓர் திருப்தி!”

உட்காருகிறார்!

உட்கார்ந்தவரை இதுவரை இன்முகம் காட்டி உபசரித்தவர் பழைய புண்ணியகோடி!

அவருக்கு அப்பொழுது முப்பது வயது. அவருடைய இளம் மனைவி அன்னபூரணி!

“அன்னம், நம்ம வீட்டுக்கு யார் வந்திருக்கிறார்கள் பார்!”

“உள்ளேயிருந்த அன்னத்தின் காதுகளில் அந்த வார்த்தைகள் விழவில்லை!”

புண்ணியகோடியின் மகளான புஷ்பவல்லி அம்மாவிடம் மழலை பேசுகிறாள். “அம்மா ஆரோ வந்திருக்காங்க!”

“யார்ரி?”

“இங்கேயே கேக்கிறயே அம்மா வெளியே வந்துபாரு, புஷ்பா சொல்றது உண்மை!” புண்ணியகோடியின் மகன் புருஷோத்தமன் கூறுகிறான்.

“பேசாமலிருங்க!” என்றுசொல்லிவிட்டு இரண்டுபேர் தட்டுகளிலும் தோசைகளைப் போட்டுவிட்டு, மிளகாய்ப் பொடி போட்டு நெய்யை

ஊற்றிவிட்டு வெளியே வந்தாள் அன்னபூரணி!

தங்கச்சிலையொன்று அன்ன நடை பயின்று வருவதுபோல் வருவதைக் கண்ட அந்த விருந்தினர் வைத்த விழிகளை வாங்காமல் பார்த்தார்.

"சார் இவள்தான் என் மனைவி அன்னபூரணி! பி. ஏ. படித்தவள். எனக்கு இரண்டு குழந்தைகள் சார்! ஒன்று மகன், மற்றொன்று மகள்!"

புண்ணியகோடி அவரிடம் மனைவி மக்களைச்சுட்டிக் காட்டினார்,

வந்திருந்தவர் அவர்களை முறைப்படி பார்த்தார். வரிசையாக அன்னபூரணி, புருஷோத்தமன், புஷ்பவல்லி மூவரும் அவரை வணங்க அவர் பதிலுக்கு இன்முகம் காட்டி வணங்கினார்.

"அன்னபூரணி, இவர் யார் தெரியுமா? என்று கேட்ட புண்ணியகோடியைப் பார்த்த அன்னபூரணியின் முகத்திலே தெரியாத பாவம் தெரிந்தது.

"இவர்தாம்மா ஆமதாபாத் மில் முதலாளி பராங்குசம். நம்ப ஊர் சிவராமன் மகன் இவருடைய பெண் அம்புஜாட்சிக்குக் கொடுக்கப்போகிறார்கள். அதற்காக வந்திருக்கிறார்" என்றார் புண்ணியகோடி.

"அப்படியா! அம்புஜாட்சி நல்ல பெண்! அவளுக்கு ஆமதாபாத்தில் நல் உறவு கிடைக்கிறதென்றால் எங்களுக்கும் ரொம்பசந்தோஷம்!" என்றாள் அன்னபூரணி.

அன்னபூரணியின் வாயுரைகளைக் கேட்ட பராங்குசம் மிகவும் மகிழ்ந்து போனார்.

"ஆமாமம்மா உங்களைப்போன்ற சுபமான கரங்கள் திருமணத்தை நடத்தித்தரவேண்டும்!" என்றார்,

"ஆகா அதற்குத்தானே இருக்கிறோம்!" என்றாள் அன்னபூரணி!

பராங்குசம் அந்தப் பதிலைக்கேட்டுப் பரவசமானார்!

"அன்னபூரணி பேச்சு சுவாரசியத்தில் விஷயத்தை மறந்துவிட்டேன். இவருக்கு டிபன் காபி கொண்டுவா!" என்றார் புண்ணியகோடி!

தலையை அழகாக ஆட்டிவிட்டு உள்ளே சென்ற அன்னபூரணி வெள்ளித்தட்டில் தோசைகளை எடுத்துக்கொண்டுவந்துவைத்தாள். மிளகாய்ப்பொடி, பருப்புப்பொடி, சாம்பார் சட்னி, ஊறுகாய், சர்க்கரை இவ்வளவையும் எடுத்து வந்தாள்.

பராங்குசத்திற்கு அந்த உபசரிப்பு புண்ணியகோடி தம்பதியின்மீது மிகுந்த அன்பை வளர்த்தது.

'மிளகாய்ப்பொடியே போதும்மா! ஏன் இவ்வளவும்!" என்று சொன்னார் பராங்குசம்.

தோசைகட்கு மிளகாய்ப் பொடி போட்டு நெய்யை ஊற்றினாள்.

பராங்குசம் சில தோசைகளைச் சாப்பிட்டுக்கொண்டே பல விவரங்களைப்பற்றிப் பேசினார். இறுதியில் காபியைக் கொண்டுவந்தாள் அன்னபூரணி.

காபியைக் குடித்துவிட்டு, "அம்மா உங்களைப்போன்ற தம்பதிகள் உலகத்தில் இருக்கவேணும்மா!" என்றார்.

பிறகு புண்ணியகோடியைப் பார்த்து, "மிஸ்டர் புண்ணியகோடி நீங்கள் ஆமதாபாத்திற்கு அவசியம் குடும்பத்துடன் வாருங்கள். என் மனைவியிடம் உங்கள் உபசரிப்பைச் சொன்னால் உயிரையே விட்டுவிடுவாள்!" என்றார்.

"புண்ணியகோடி சிரித்துக் கொண்டே "அவசியம் நேரட்டும் வருகிறோம்" என்றார்.

அதன் பிறகு பராங்குசம் விடை பெற்றுக்கொண்டு சென்றுவிட்டார்.

சில நாட்கள் பறந்தன!

அம்புஜாட்சியின் திருமணம் மிகவும் விமரிசையாக நடந்தது. புண்ணியகோடி தம்பதியினர் அந்தத் திருமணத்தில் முக்கிய பங்கேற்றனர்.

அதன் பிறகு புண்ணியகோடியின் செல்வம் வளர்வதற்குப் பதில் தேய ஆரம்பித்தது. ஒரு பாவமும் செய்யாத அவர் நாளுக்கு நாள் ஏழையாக ஐந்தே ஆண்டுகளில் பரம தரித்திரரானார்!

வீடு ஒன்றுதான் மிஞ்சியது. அன்னபூரணி என்ன செய்வாள்? இரண்டே இரண்டு செல்வங்கள் இனிமேல் தரித்திரத்தில் வளரும் நிலை ஏற்பட்டுவிட்டதை எண்ணும் போது அவளுடைய மனம் உடைந்து விழிகளில் நீரூற்றுகள் பெருக்கெடுத்தன!

இதோ புண்ணியகோடி ஆண்ட வனைக் கடந்த பத்து நாட்களாக அரைப்பட்டினி கால்பட்டினியுடன் வேண்டியும் பலன் பூஜ்யம்! எனவே இன்றுஓர் முடிவுக்கு வந்துவிட்டார். வீட்டு வாசற்படியை மிதிக்கக் கூடாது என்று தீர்மானித்து வட இந்தியாவை நோக்கிக் கிளம்பி விட்டார்.

பொங்கிய கஞ்சியை இறக்கி வைத்துவிட்டுப் போனவர் வரவை எதிர்பார்த்த அன்னபூரணி ஏமாந்து போனாள். அழுது அரற்றினாள். பலனில்லை!

புண்ணியகோடி போனவர்போன வர்தான்!

"புருஷோத்தமா!"

"அம்மா!"

"அப்பா நம்மை விட்டுவிட்டுப் போய்விட்டார்டா!"

"அம்மா!"

"புஷ்பம்!"

"அம்மா!"

"உன்னைப் பெற்றவர் ஓடிவிட்டார்மா!"

"அம்மா!"

ஒரே அழுகை!

ஊரார் வந்தனர். ஏதேதோ சமாதானம் கூறினார்கள். பத்து வயது மகனையும், எட்டு வயது மகளையும், அணைத்துக்கொண்டு அன்னபூரணி நீண்டநேரம் அழுது தீர்த்தாள்!

இறுதியில் ஓர் யோசனை அவளுக்குப் பளிச்சிட்டது. வீட்டை விற்று விடுவது என்று,

வீட்டை விற்றுவிட்டு எங்கே போவது? இந்தக் கேள்வி அவளை ஆயிரம் ஈட்டிகளாகக் குத்தின!

திடமான தீர்மானத்துடன் சிவராமனிடம் விஷயத்தைச் சொன்னாள். அவர் ஊராரிடம் கேட்டார்!

ஊரார் அன்னபூரணியைப் பல விதமாக எடை போட்டனர்.

அன்னபூரணிக்குக்குழந்தைகளின் எதிர்கால வாழ்வுப் பிரச்சனை, தன் மானப் பிரச்சனை இருந்தது. ஆகவே ஊராரை, ஆராரோ பாடித் தாலாட்டித் தூங்க வைக்க' அவள் தயாராக இல்லை.

சிவராமனிடம் ஊரார் என்னென்னமோ சொன்னார்கள். இறுதியில் சிவராமன் வீட்டை விலைக்கு வாங்கிக்கொள்ள முடிவுசெய்து, "அன்னபூரணி வீட்டை நான் வாங்கிக் கொள்கிறேன்!" என்றார்.

வீடு விற்பனை பேரம் நடந்தது.

இரண்டாயிரத்து நூறு ரூபாய்க்கு அன்னபூரணி வீட்டைச் சிவராமனுக்கு விற்றுவிட்டாள்.

விற்ற பணத்தை எடுத்துக் கொண்டு அடுத்திருந்த நகரத்திற்குச் சென்ற அன்னபூரணி வாடகைக்கு ஓர் வீட்டை அமர்த்திக் கொண்டு புஷ்பவல்லியையும், புருஷோத்தமனையும் உயர்நிலைப் பள்ளிகளில் சேர்த்தாள்.

மூன்று மாதங்கள் ஓடின!

அன்னபூரணிக்குப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் ஓர் ஆசிரியர் வேலை கிடைத்தது. அந்த உயர்நிலைப் பள்ளி நிர்வாகி ஒழுக்கக் குறைவானவன். இருந்தாலும் அன்னபூரணியிடம் அவனுக்கு ஓர் பயம், மரியாதை வளர ஆரம்பித்தது.

ஆனால் ஊர் வாய்கள் அசைபோட ஆரம்பித்தன. அன்னபூரணி தப்பியிருப்பாளா என்ற சந்தேகம் தான்! அதை உறுதியாக்கியே பேசி வந்தனர். ஏனென்றால் அவர்களைப் போல் இதைப் பேசாதே, அதைப் பேசு என்று சொல்ல யார் இருந்தார்கள்; ஆகவே அவர்கள் தங்களுடைய வாடிக்கையான கடைகளை திறந்து வைத்துப் பேசினர்.

அதனால் நிர்வாகிக்கு அதிக துணிச்சல் உண்டாகி அன்னபூரணியை நெருங்கவும் இல்லை! அல்லது அன்னபூரணியின் மனம் இருண்டுபோய் குழம்பவுமில்லை! அவள் என்றும்போல் பழகிப் பேசி வந்தாள்.

புருஷோத்தமனுக்கு அடுத்த இரண்டு வகுப்புகளை கீழாகப் புஷ்பவல்லி படித்து வந்தாள்.

காலம் யாருக்காகவும்நிற்கவில்லை!

புருஷோத்தமன் பி. ஏ. பி. எல்., பாஸ் பண்ணிவிட்டு வழக்கு மன்றத்திலே நுழைந்தான். புஷ்பவல்லி பி. ஏ. பாஸ் செய்துவிட்டுத் திருமணத்திற்கு நின்றாள்.

புஷ்பவல்லி அவளுடன் நெருங்கிப் பழகியவனை ஓர்நாள் அழைத்து வந்தாள்.

அன்னபூரணியிடம், "அம்மா, இவர்தான்!" என்று கூறினாள்.

'ஓ அவரா உட்காருங்கள்!"

மிகவும் நாகரிகமானஉடையணிந்திருந்த அவன் அன்னபூரணி காட்டிய இடத்தில் இருந்தநாற்காலியில் அமர்ந்தான்.

என்ன மிஸ்டர் தனசேகர் அம்மாவிடம் ஏன் வெட்கப்படவேண்டும், நீங்கள் அம்மாவுடன் தாராளமாக மனம்விட்டுப் பேசலாம் என்று புஷ்பவல்லி கூறிவிட்டுச்சிரித்தாள்.

"அப்படியா! நன்றி புஷ்பவல்லி! உம், உங்கள் மகளோடு மிகவும் கண்ணியமாகப் பழகிய ஆதித் தமிழ் மகன் நான்!"

அன்னபூரணி சில விநாடிகள் பேசாமல் இருந்தாள். இதற்குள் அவளுக்கு அழுகை வந்தது.

"பார்த்திங்களா? இதற்காக நீங்கள் ஏன் அழவேண்டும்? என்னால் எளிதில் சுலபமாகப் புஷ்பாவை மறந்துவிடமுடியும், புஷ்பா, என்ன சொல்லுகிறாய்?" தனசேகரன் கணீலென்று கேட்டான்.

புஷ்பவல்லி மௌனமாகக் கண்ணீர்விட்டாள்.

இப்பொழுது அன்னபூரணிக்குச் சிரிப்பு வந்தது. 'மிஸ்டர் தனசேகர் உங்களை நான் நன்றாகப் புரிந்ததாக நீங்கள் கருதினால் அது மிகவும் தவறு. இந்த புஷ்பவல்லியை உங்களைப்போன்ற உயர்ந்த குடிமகனுக்குக் கொடுக்க நான் உண்மையிலேயே பேறுகள் புரிந்திருக்க வேண்டும்!" அன்னபூரணி நிறுத்தினாள்.

"மிக்க மகிழ்ச்சி! ஆனால்............ம் என்ன செய்வது சொல்லுங்கள். திருமதி அன்னபூரணி சமுதாயம் என்னை பயமுறுத்தியிருக்கிறது. நேர்மை என்னை முறைதவறுதபடி செய்திருக்கிறது!" என்றான் தனசேகரன்.

புஷ்பவல்லிக்கு அப்பொழுதே தனசேகரனைக் கட்டிக்கொள்ளலாமா என்றிருந்தது. அடக்கம் வெகுவாக அவனைத் தடுத்துப் பரவசத்தில் ஆழ்த்தியது.

"மிஸ்டர் தனசேகர் யார் தெரியுமாம்மா, இந்த மாவட்டக் கலெக்டர்"

அப்படியா மிக்க மகிழ்ச்சி மிஸ்டர் தனசேகர். உங்கள் திருமணத்தை விரைவில் நடத்தி வைக்கிறேன்!" என்றாள் அன்னபூரணி.

உடனே புஷ்பவல்லியும், தனசேகரும் அன்னபூரணியின் கால்களில் வீழ்ந்து வணங்கினர்.

அவர்களுடைய இரு கரங்களையும் ஒன்று சேர்த்தாள் அன்னபூரணி.

பிறகு சிற்றுண்டி உபசாரம் நடந்தது. அதன் பிறகு தனசேகர் விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

புருஷோத்தமனுக்குப் புஷ்பவல்லியின் காதலை எடுத்துக் கூறினாள் அன்னபூரணி. அவனுக்குப் புஷ்பவல்லியின் காதல் மிகவும் பிடித்திருந்தது.

திருமணநாள் குறிக்கப்பட்டது.

மிகவும் ஆடம்பரமாகத் திருமணம் நடக்க ஆரம்பித்தது.

வீட்டு வாயிலில் விருந்தினர்கள் சாப்பிட்ட எச்சில் இலைகட்குப் பிச்சைக்காரர்கள் போட்டியிட்டனர். அதில் ஒருவன் அடிபட்டுவிட்டான். இதைப் பார்த்த புருஷோத்தமன் சட்டென்று இரக்கப்பட்டவனாய், "டேய் சுந்தரம் அதோ பாருடா பாவம் கிழவன்! அவனை இங்கே அழைத்துவா!" என்றான்.

ஓடிப்போய் சுந்தரம் அந்தக் கிழவனை அழைத்து வந்தான்!

இதற்குள் அன்னபூரணி புருஷோத்தமனைத் தேடி வெளியே வந்தாள். வெளியே வந்தவள் அப்படியே பிரமித்து நின்றுவிட்டாள்.

சுந்தரம் திருமணச் சாப்பாட்டை ஒரு பிச்சைக்காரனுக்குப் போடுவதையும், "ஏம்பா இங்கே சாப்பாடு கேட்டால் போடமாட்டோமா? அதற்காக இப்படி அடிபட்டுவிட்டாயே!" என்று புருஷோத்தமன் பேசுவதையும் கேட்டாள்.

அன்னபூரணியின் கண்களில் நீர் பெருகியது. "அட புருஷோத்தமா அது யார் தெரியவில்லையா உன்னைப் பெற்றவர்டா!" என்று நினைத்தாளோ இல்லையோ ஓடோடி வந்தாள்.

பிச்சைக்காரனைக்கட்டிக்கொண்டு "ஐயோ, இதோ பாருங்கள், நான் தான் அன்னபூரணி!" என்று உரக்கக் கூவினாள் அன்னபூரணி!

பிச்சைக்காரக் கிழவனின் கண்கள் அகல விரிந்தன. ஆம் புண்ணியகோடி.

அம்மாவுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்ற கோபத்தில் "அம்மா!" என்று உரக்கக் கூவிய புருஷோத்தமனுக்கு அவமானம் பிடுங்கித்தின்றது.

'பொறுடா பைத்தியமே! இவர் என் கணவர்தாண்டா! இதோ பாருங்கள் இது யார் என்று!" என்று கூறினாள் புருஷோத்தமனைப் பார்த்து.

"யாரு அன்னபூரணி புருஷோத்தமனா?" என்று கேட்டார் புண்ணியகோடி.

"ஆமாம் அந்தப்பயல்தான்!" என்றாள் அன்னபூரணி!

புருஷோத்தமனுக்கு அறிவு தெளிந்தது! "அப்பா நானேதான்!" என்று கதறியபடி அவருடைய கால்களில் வீழ்ந்தான்.

"எழுந்திருடா மகனே!" என்று அவனைத் தூக்கி நிறுத்தினார் புண்ணியகோடி.

"அப்பா புஷ்பாவுக்குக் கலியாணம்! நல்லகாலம், நல்லதருணத்தில் வந்துவிட்டீர்கள்!" என்ற மகிழ்ச்சியோடு கூறி புண்ணியகோடியை உள்ளே அழைத்துச் சென்றான் புருஷோத்தமன்.

மணக்கோலத்தில் இருந்த தனசேகர், புஷ்பவல்லி தம்பதிகள் செய்தியறிந்து ஓடோடி வந்து புண்ணியகோடியை வணங்கினர்!

அவர்களை ஆசீர்வாதம் செய்த புண்ணியகோடி கண்ணீர் உகுத்து மெய்ம்மறந்தார். ●

## காமராசர் கவனத்திற்கு......!

# தமிழ்நாடு காங்கிரஸ் கலைக்கப்படும்?

தமிழகக் காங்கிரசுக்காரர்கள் அனைவராலும் (ஒரு மனதாக!) தலைவர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படும் காமராசர் அவர்களே!

''ஆட்சிமொழித் திருத்த மசோதா மாறுதல்கள் ஏதும் செய்யப்படாமல் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்''

என்று பெங்களூரில் பேசினீர்கள்! குத்து வெட்டு, கொலைவாளை எடு என்று கூத்தாடிக்கொண்டிருந்தோர் கொடுத்த திருத்தங்களோடு மசோதா நிறைவேறி விட்டது. இது கண்டும் பொருத தாங்கள்—

''மத்திய அரசின் பணிகளில் சேர இந்தியும் வேண்டாம் ஆங்கிலமும் வேண்டாம்; தாய் மொழி மட்டும் தெரிந்திருந்தால் போதும் என இந்தி பேசாத மக்கள் கோரிக்கை எழுப்பக்கூடிய நாள் வரலாம்! அத்தகைய தொரு கோரிக்கை எழுப்பப்பட்டால் அதைத் தட்டிக் கழிப்பது சுலபமான காரியமல்ல''

என்று மீண்டும் இந்தியத் தலைநகரிலேயே எடுத்துக் காட்டிப் பேசி இருப்பது கண்டு உளம் பூரிக்கிறோம்!

இத்தகைய பேச்சுக்கள் மூலம், தாங்கள் தங்கள் தமிழகத்து அரசியலுக்கு இரும்பு முள்வேலி போட்டுக் கொண்டுவிட்டீர்கள்! இது அ ர சி ய ல்!! எனவே போகட்டும்!

ஆனல், தலைவர் அவர்களே! இந்தப் பேச்சுக்கள் உண்மையானவை என்ருல், தங்கள் இதயத்தில் சுரந்த கருத்துக்களே என்ருல்,

தங்கள் கவனத்துக்கும், சீரிய சிந்தனைக்கும் இதனைப் படைக்கிறோம்! சிந்தியுங்கள்! செயல்படும் விதத்தில் சிந்தியுங்கள்!

இந்தி வெறியர்கள் கொடுத்த திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப் படவில்லையானல், ராஜினமா செய்வோம்! என்று மிரட்டினர்கள்! தங்கள் காரிய சாதனைக்கு ராஜினமா அச்சுறுத்தல் நல்ல பலன் கண்டிருக்கிறது!

வடக்கே தங்கள் தலைமையும் செல்வாக்கும் இழித்தும் பழித்தும் விமர்ச்சிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே மொழிச் சட்டமும் திருத்தத்துடன் ஏற்கப்பட்டிருக்கிறது

தாங்களும் இதனை எதிர்க்கிறீர்கள். சுப்பிரமணியம் எதிர்க்கிருர். அறிவு முடமாகிப்போகாத இன்னும் பலகாங்கிரஸ்காரர்களும் எதிர்க்கிருர்கள்! ஏன்தங்கள் ஏடுகூட எதிர்த்துத் தலையங்கம் எழுதி இருக்கிறது!

எனவே, கூட்டாகச் சேர்ந்து, தமிழகக் காங்கிரசுக் கட்சியைக் கலைத்துவிடுவது ஒன்றுதான் வடபுலத்தின் இந்தி வெறியர்க்குக் கண் தெரியச் செய்யும் சிறந்த செயலாக இருக்கமுடியும்!

– காங்கிரசிலிருந்து கூட்டாக அனைவரும் விலகுவது - கட்சியைக் கலைத்துவிடுவது —

என்பது இந்தி வெறியர்க்கும், இந்திரா அம்மைக்கும் சரியான பாடமாக இருக்கும்!

தமிழகத்தில் ஒரு நாலைந்து பேர் தலைவர்கள்! கூடிச் செயலாற்றலாம்! யோசித்து முடிவு எடுக்கலாம்!

இந்தி வெறிபிடித்த ஓநாய்களின் உறுமல் காரணமாக உருவாக்கப்பட்டுவிட்ட ஏகாதிபத்தியப் போக்குக்கு புத்தி புகட்ட இதுதான் தருணம்! இதுதான் வழிமுறை!

ஆமாம் காமராசர் அவர்களே! காங்கிரசைக் கலைத்து விடுவதாக (ஒப்புக்குத்தான்!) ஒரே ஒரு அறிவிப்புக் கொடுங்கள்! கூட்டாகச் சேர்ந்து கொடுங்கள்!

தமிழர் நலனில் அக்கறை மிக்கோர் என்று கூறப்படுபவரே! தமிழர்தம் எதிர்காலத்துக்காக இதனைச் செய்வீர்களா!

இந்தியும் வேண்டாம்; ஆங்கிலமும் வேண்டாம்.

—என்று அதன் பிறகு இன்னுமொரு அறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

கட்சியைக் கலைத்துவிட்டதாக அறிவிப்புக் கொடுத்துவிட்டு தங்கள் புதுடில்லிக் கருத்தைத் தமிழகத்து மேடைகளில் முழங்கவேண்டும்!

காந்திய நெறியில் தங்கட்கு நம்பிக்கை இருக்குமானல், நேருவின் பாதையில்—சோஷலிச சித்தாந்தத்தில் தங்களுக்கு இதய ஈடுபாடு உண்டென்ருல் அரசியல் சட்டம் பாகுபாடு காட்டுகிறது—பாகுபாட்டுக்கு வழிகோலுகிறது என்பதைச் சிந்தித்துத் தெளியும் திறனேடு திகைக்கிறீர்கள் என்ருல்—

அறிவிப்புக் கொடுங்கள்!

தமிழர் நலனில் கொண்டுள்ள அக்கறைக்கு செயல் திட்டம் காட்டுங்கள்!

இந்தி வேண்டாம்! என்று இன்னெருமுறை சொல்லுங்கள்! மூச்சோடு மூச்சாக, மசோதா சட்டமாகி விட்டது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்!

அப்போது—

தமிழகக் காங்கிரஸ் கலைக்கப்பட வேண்டிய அவசர அவசியம் தானகப் புலப்படும்!

இராணுவத்தை அனுப்பி இந்தியை நுழைப்போம்! என்ற மூர்க்கர்களது முகம், முக்காடு தேடவேண்டிய நிலையை நீங்கள் ஏற்படுத்த முடியும்!

இருபத்து ஐந்து ரூபாய் கொடுத்தால் தமிழர்கள் இந்தி படிப்பார்கள் என்று பிச்சைக்காரனக இருந்து பேசும் விபூதி மிச்ராக்கள் ஓடேந்தி ஓடச்செய்த புண்ணியம்வந்துசேரும்!

இதுவரை, சரியாகவோ, தவருகவோ, ஏற்பட்டு விட்ட களங்கம் கழுவப்பட கட்சியைக் கலைக்கப் போவதாகக் கொடுக்கின்ற அறிவிப்பு ஒன்றுதான் சரியான கழுவாயாக அமைய முடியும்!

செய்வீர்களா காமராசர் அவர்களே! எதிர்பார்க்கலாமா?

தமிழர்களைக் காட்டிக்கொடுத்த நாட்களை எண்ணி, இனியாவது காக்கவேண்டிய பொறுப்பினை உணர்வீர்களா?

தலைவர் அவர்களே!

விரைவில், "காமராசர் காங்கிரசிலிருந்து ராஜினமா! தமிழ்நாடு காங்கிரசும் கலைப்பு!" என்ற தலைப்புடன் கூடிய எட்டு பத்திச் செய்திகளை எதிர்பார்க்கலாமா?

ஏதோ, தமிழின் மீது, தமிழகத்தின் எதிர்காலத்தின் மீது கொஞ்சம் பற்று, பாசம் இருப்பதாகக் கூறப்படும் கூற்றை மெய்ப்பிப்பீர்களா?

தலைவர் அவர்களே! அன்ருேர்நாள்! அயர்லாந்தின் விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

தலைமையேற்று நடாத்திக்கொண்டிருந்தான் டிவேலரா!

விடுதலை விவகாரத்தோடு மொழி விவகாரமும் இணைக்கப்பட்டது!

சூடாகச் சொன்ஞன் டிவேலரா!

'அயர்லாந்து வேண்டுமா? காலிக் மொழி வேண்டுமா? என்று என்னிடம் எவரேனும் கேட்டால், நான் அந்த வஞ்சகர்களுக்குச் சொல்வேன்: 'அயர்லாந்துவேண்டாம்; காலிக் மொழிதான் வேண்டும்' என்று!

வரலாற்றைப் படிக்கிருேம்! கண்ணீரை விடுக்கிருேம்!

இந்தி வேண்டுமா? இந்தியா வேண்டுமா? ஏற்கனவே இப்படித் தமிழக மாணவர்கள் கேட்டுவிட்டார்கள் பிரதரிடம்!

பாராளுமன்றத்திலும் இந்த விஞதான் கேட்கப்பட்டது!

விடையிறுத்துவிட்டார்கள் வெறியர்கள்! இந்திதான் என்று!

அவர்கள் மீது பழியில்லை. அது அவர்கள் மொழிப் பற்று.

நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

மொழித் திணிப்பின் எதிர்காலத்தை மனக்கண்ணுல் காண்போர், சட்ட விரோதச்செயல் தடுப்பு மசோதா என்ற ஒன்றை உடனேயே நாடாளுமன்றத்தில் வைத்துவிட்டார்களே, கவனித்தீர்களா?

பொருள் புரிகிறதா?

இந்தியும் வேண்டாம்! ஆங்கிலமும் வேண்டாம்! தாய்மொழி தெரிந்தால் போதும்! மத்திய அரசே! எனக்கு வேலைகொடு! என்று கேட்குமாறு தமிழகத்தைத் தயார்செய்யத் தாங்கள் தயாரா!

அதற்கு ஈடுகட்டும் முறையாகக் காங்கிரசைக் கலைப்பீர்களா?

இந்தி வேண்டாம்! தமிழே போதும் என்று குரல் கொடுப்பீர்களா?

நம்பலாமா?

—திருவாரூர் முத்துராமன்.

4-ம் பக்கத்தொடர்ச்சி

நாடாளுமன்றத்தில் இந்த மசோதாவையும் தீர்மானங்களையும் எதிர்த்தார்கள் என்ற நிலை மாறி தமிழகமே ஒருமுகமாய்க் கிளர்ந்தெழுந்து இந்தித் திணிப்பை எதிர்த்துப் போர்க்குரல் கொடுத்தது என்ற நிலை பிறக்க வேண்டும்.

## நாட்டுப் பற்று என்பதுதான் என்ன?

பிரிட்டிஷ்காரர்களின் பேழ் வாய்ப் பீரங்கிகளை எதிர்த்துப் போரிடுவது மட்டும்தான் நாட்டுப் பற்று என்று எந்த அகராதியும் விளக்கவில்லை. மொழி காக்க—இனங் காக்க—பண்பு காக்கப் போர்க்குரல் கொடுப்பதையும் நாட்டுப் பற்று என்றுதான் உலகத்து அறிஞர்கள் சொல்லுகிருர்கள்.

அந்த வகை நாட்டுப் பற்றை வளர்த்திட வேண்டிய பொறுப்பு தமிழகத்து நாளிதழ்களுக்கு நிரம்ப உண்டு. இந்தியாவின் ஒரே ஒரு மாநிலத்தில்தான் நிலையான—நிதானமான ஆட்சி நடக்கிறது — காங்கிரசல்லாத கட்சி ஆண்டு கொண்டிருக்கிறது. ஆளுகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இதில் பெரும்பங்கு உண்டு என்ருலும் தமிழக நாளிதழ்கள் இதற்காக ஆற்றிய பணி அதிகம். அதே போலத்தான் இப்போதும் அவை பணியாற்றிட வேண்டும்.

தமிழகத்தின் ஆளுங் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மசோதாவை எதிர்க்கிறது. பெரிய எதிர்க் கட்சியான காங்கிரசின் தலைவர் காமராசர் திருத்தப்பட்ட திருத்த மசோதாவை எதிர்க்கிருர். தமிழகக் காங்கிரசின் எதிர்காலத் தலைவர் என ஊகிக்கப்படும் சி. சுப்பிரமணியம் அதை எதிர்க்கிருர். திரு. சின்னதுரை தலைமையில் கூடிய பி. சோ. கட்சிக் கூட்டத்தில் 'இது பிளவினை உண்டாக்கும்' என்று கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது, இடதுசாரி கம்யூனிஸ்டுகளின் தலைவர்களான திரு. பி. இராமமூர்த்தியும் திரு. கே. அனந்தன் நம்பியாரும் நாடாளுமன்றத்திலேயே தங்கள் கருத்துக்களைச் சொல்லி இருக்கிருர்கள். சுதந்திரக் கட்சியின் நிறுவனர் முதுபெருந் தலைவர் இராஜாஜி இதனை முழுக்க எதிர்க்கிருர்.

இவை எல்லாம் சேர்ந்து நாளிதழ்களின் பளுவைக் குறைக்கின்றன. ஆனல் இந்த ஒருமுகப்பட்ட தமிழக உணர்வை டில்லிக்கு உணர்த்திட வேண்டும். நாடாளுமன்றத்தில் நிறைவேறி விட்டதாலேயே இந்த மசோதா சட்டமாகி விடாது. அடுத்து மாநிலங்கள் அவையில் முதிர்ந்த அரசியல் தலைவர்களிடையே இந்தப் பிரச்சினை அமைதியாக விவாதிக்கப்பட இருக்கிறது. அந்த நேரத்தில் தமிழக நாளிதழ்கள் தங்கள் கருத்துக்களைத் திட்ட வட்டமாகச் சொல்லலாம்.

எல்லையில் பாகிஸ்தானிகளும் சீனரும் வந்திருந்து தொல்லை தந்தபோது திரண்டெழுந்து பொங்கி நின்ற போக்கு இப்போதும் இருக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் திரு. கி. மனேகரன் சுட்டிக் காட்டிய மாதிரி 'சள்ளை பிடித்த' இந்த இந்திக்கு வடநாட்டு வெறியர்கள் எப்படியெல்லாம் வஞ்சக வலை விரித்தார்கள் என்பதை நாளிதழ்கள் மிக நன்ருக விளக்கியாக வேண்டும். தமிழக முதல்வர் அறிஞர் அண்ணு அவர்கள் சொன்னதுபோல பொதுமக்கள் கருத்தினைத் திரட்டிடும் அவர் பணியில் துணை நிற்கவேண்டும். அப்போதுதான்—

"எப்பக்கம் வந்து புகுந்துவிடும் இந்தி?
எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்?"

என்ற புரட்சிக் குரல் கொடுக்க முடியும்!

# "காஞ்சி"

# பொங்கல் மலர் (1968)

எதிர்பாராத நிகழ்ச்சிகள் நிகழ்ந்துவிடும்போது

**அப்போதே சொன்னேன் என்பதைக் கேட்டிருப்பீர்கள்!**

முழுத் திருப்பத்தை முற்றிலும்கொண்டதுதான்

40-பக்கங்களுக்கு மேலாக

## அறிஞர் அண்ணா

அவர்களின்

## 'அப்போதே சொன்னேன்!'

என்ற நீண்ட கதை

★

சமூகச் சீர்கேட்டுக்கு யார் யார் எப்படித் தங்களைக் காணிக்கையாக்கிக்கொண்டு ஆட்டிப்படைக்கிறார்கள் என்பதை விளக்குவதுதான்

## அறிஞர் அண்ணா அவர்களின்

## இ ன் ப ஒ ளி

தொடர் ஓவியம் மலரிலிருந்து ஆரம்பமாகிறது!

★

மற்றும்

## தம்பிக்கு மடல் கட்டுரையோடு

தலைவர்கள், அமைச்சர்கள், கலைஞர்கள்

பலரும் படைக்கும் கலைக் களஞ்சியமாக வெளிவருகிறது.

★

இத்துடன்,

## உலகத் தமிழ் மாநாடு

சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன!

# வலியா? ஜலதோஷமா?





பத்து சக்திமிக்க மருந்துகள் சேர்ந்தது

# அமிர்தாஞ்சனம்

## உங்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கிறது

சக்தி வாய்ந்த பத்து மருந்துகள் கொண்ட அமிர்தாஞ்சனம் வலிகளைப் போக்கி ஜலதோஷத்தை நீக்குவதற்கென்றே பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டது. எழுபது ஆண்டுகளாக லட்சக் கணக்கான குடும்பங்களில் பயன்பட்டு வரும் கைகண்ட நிவாரணி அது.

**வலிகளுக்கு:** தசைவலி, தலைவலி, சுளுக்கு, அல்லது மூட்டு வலி எதுவாக இருந்தாலும், வலியுள்ள இடத்தில் சிறிது அமிர்தாஞ்சனம் தடவுங்கள். சில நிமிடங்களில் நிவாரணம் ஏற்படுவதை உணர்வீர்கள்!

**ஜலதோஷத்துக்கும், மார்புச் சளிக்கும்:** சாதாரண ஜலதோஷமானல் மூக்கின் உட்புறத்திலும் மூக்கின் கீழும் அமிர்தாஞ்சனம் தடவுங்கள்; அல்லது சிறிதளவு அமிர்தாஞ்சனம் எடுத்து வெந்நீரில் இட்டு, ஆவியை சுவாசியுங்கள். மார்புச் சளியானல், மார்பில் அமிர்தாஞ்சனம் தடவுங்கள். மிகமிக விரைவில் நல்ல நிவாரணம் ஏற்படுவதைக் காண்பீர்கள்.

ஒவ்வொரு முறை பயன் படுத்துவதற்கும் சிறிதளவு அமிர்தாஞ்சனமே போதும்; ஆகவே ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்துக்கு மாதக் கணக்கில் வரும், அமிர்தாஞ்சனத்தை எப்பொழுதும் கையோடு வைத்திருங்கள்.

அமிர்த்தாஞ்சனம் கையடக்கமான, குறைந்த விலை டின்களிலும் கிடைக்கிறது.




அமிர்தாஞ்சன் லிமிடெட்,
மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி.

am-3770

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
36, திருக்கச்சிநம்பி தெரு, ஆல்வி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.